Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPURTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY
SELL
INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877
www.divhomes.com

33ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி: 33 | பாலம்: 24 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | DECEMBER 15, 2023

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
Homelife/Future Realty Inc.

# மத்திய அரசின் இலையுதிர்காலப் பொருளாதார அறிக்கை

கனடிய மத்திய அரசின் இலையுதிர்காலப் பொருளாதார அறிக்கை கோவிட்-19 பெரும்தொற்று நோய்க்குப்பின்னர் செல வினங்களைக் குறைப்பதை எடுத்துக் காட்டியது. ஆனாலும், இவ் அறிக்கை யில், 2023இல் கனடிய மத்திய அரசு சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டதை விட அடுத்த ஆறு ஆண்டுகளில் $20.8 பில்லியன் அதிகப்படி யான செலவினங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

2023 நொவம்பர் 21இல் துணைப்பிரதமரும் நிதியமைச்சருமான Chrystia Freeland நாடாளுமன்றத்தில் 131 பக்கங்களைக் கொண்ட மத்திய அரசின் இலையுதிர் காலப் பொருளாதார அறிக்கையைச் சமர்ப்பித்தார். இதில் கனடாவில் வீட்டு வசதியை அதிகரிக்கும் நோக்கத்துடன் புதிய செலவினங்கள் உள்ளடக்கப்பட்டிருந் தது. ஆனாலும், இப்பொருளாதார அறிக்கையிலும் 2023ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் அறிவித்தமாதிரி $40 பில்லியனாக இருந்தது.

மத்திய அரசின் இலையுதிர்காலப் பொருளாதார அறிக்கையை நாடாளு மன்றத்தில் சமர்ப்பித்தபோது நிதியமைச்சர் ஆற்றிய உரையில், "நாட்டில் பணவீக்கம் குறைந்து வருகிறது, பணியாட்களின் ஊதியம் அதிகரித்து வருகிறது. அத்துடன் பலர் எதிர்வு கூறிய மாதிரி பெரும் தொற்றுநோய்ப் பரவல் காலத்திற்குப் பின்னர் கனடா பொருளாதார மந்த நிலையை எதிர்கொள்ளும் என்பது தற்போது தவிர்க்கப்பட்டுள்ளது. பல பொருளாதார வல்லுநர் தற்போது கனடாவில் பொருளாதார மந்தநிலை ஏற்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளனர்" என்று கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இன்று பல கனடியர்கள் எதிர்நோக்கும் யதார்த்த நிலையை நான் மறுக்கவில்லை. மூன்று கடினமான ஆண்டுகளுக்குப் பின்னர், உலகளாவிய கோவிட்-19 பெரும் தொற்று நோய்ப் பரவல், உலகளாவிய பணவீக்கம் மற்றும் உலகளாவிய வட்டி வீத உயர்வு களால் கனடிய மக்கள் சோர்வடைந்து விரக்தியடைந்துள்ளனர். அவர்கள் அழுத்தத்தை உணர்கின்றனர் என்பதை நான் முற்றிலும் புரிந்து கொள்கிறேன். அவர்கள் அனுபவிக்கும் வலியை நிவர்த்தி



செய்ய வேண்டும், நமது நாட்டின் எதிர் காலத்தில் நம்பிக்கையும், பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய திட்டங் களையும் உருவாக்க வேண்டும் எனக் கனடியர்கள் தற்போது எதிர்பார்க்கின்றனர்.

எங்களது இந்த இலையுதிர்காலப் பொருளாதார அறிக்கையின் அடித்தளமே எமது பொறுப்பான நிதித்திட்டமாகும். இவ்வாறு உலகளாவிய பணவீக்கம் மற்றும் வட்டிவீத உயர்வை எதிர்கொண்ட G7 நாடுகளில் கனடா மட்டும்தான் வரவு-செலவுத் திட்டத்தில் உள்ள பற்றாக் குறையை விரைவில் குறைத்துள்ள நாடாகும்" என்று கூறினார்.



வாசகர்கள் விளம்பரதாரர்கள், நண்பர்கள் அனைவருக்கும் விடுமுறைகால நல்வாழ்த்து

வசதி குறைந்தநிலையில் உள்ள கனடியர் களுக்கு வீடுகள் வழங்குவதற்காக தகுதியான விலையில் வீடுகட்ட இந்தப் பொருளாதார அறிக்கையில் $1 பில்லியன் 2025-2026 நிதியாண்டில் இருந்து அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்பட உள்ளது. இதன்மூலம் 2028ஆம் ஆண்டிற் குள், 7,000இற்கு மேற்பட்ட தகுதியான விலையில் வீடுகள் இலாப நோக்கமற்ற பொதுவீட்டுவசதி அமைப்பாளர்களால் அமைக்கப்பட உள்ளது. இது இதற்கு முன்னர் அறிவிக்கப்பட்ட $631 மில்லியன் வீடு கட்ட வழங்கும் உதவித் தொகையை விட மேலதிகமாக வழங்கப்படும் பணமாகும்.

2023ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வீடுகளை விரைவில் அமைக்க $4 பில்லியன் பண உதவி வழங்கப்பட் டிருந்தது. இந்தப் பொருளாதார அறிக்கை யில் இந்த வீடுகளை விரைவில் அமைக்க உதவுவதற்காக அரசின் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. இதன்மூலம் வீடுகள் கட்டுவதற்குத் தடையாக இருந்த பிரதேச சட்டவிதிகள் (Zoning Law) மற்றும் கட்டுப்பாட்டு விதிகள் (Regulatory rules) தளர்த்தப்பட்டுள்ளன.

அதிக வாடகை அடுக்குமாடி குடியிருப்புக் களை உருவாக்க இந்தப் பொருளாதார

தொடர்ச்சி 05 பக்கம்

சட்டச் சேவை
• டிராஃபிக் டிக்கெட்டால் சட்டப்பிரச்சினையா?
• நீங்கள் Truck driver என்பதால் வாகனப் போக்குவரத்து சட்டச் சிக்கலில் மாட்டி தவிக்கிறீர்களா?
• Assault, Theft போன்ற கிரிமினல் வழக்கு சட்டப் பிரச்சினையா?
அழையுங்கள்: Licensed Paralegal
வினோத்குமார், BA LLB LLM Candidate
(Osgoode Law School) 647-766-5189

Homelife GTA Realty
BUY/ SELL /LEASE
www.vanyhome.ca/
Life Insurance & Super Visa Insurance
www.vjsfinancial.ca
Vany Jeganmohan
REALTOR & INSURANCE ADVISOR
416-670-7436


www.ParaCity.ca
647-296-0596
TisiPara@gmail.com
Para Tisikulasingam
647 296 0596

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc.
TRUTH BUILDS TRUST

INDRA MICHAEL XAVIER
Broker
647.995.6829
indra.m.xavier@gmail.com
Buying Home/ Selling / Investing
HomeLife/Future Realty Inc.
905.201.9977 905.201.9229
205-7 Eastvale Dr. Markham ON L3S 4N8

Welcoming new patients of all ages since 2000 at ...
Bridletowne Dental
Dr. Jeyapalan, BDS., DDS.
(University of Toronto) Dentist
416 492 3775
Bridletowne Dental
385 Silver Star Blvd, Suite 217 Scarborough, M1V 0E3
(Midland & McNicoll, MAXUM Building, In the RONA PLAZA)
www.bridletownedental.com


New Brunswick
CUSTOM HOME
6500 SQ.FT
HOUSE
For Your Beloved Family
Book Now
647-296-0596
www.ParaCity.ca


BUILD YOUR OWN HOUSE
CUSTOM
HOUSE
FOR SALE
Full Home Designs — Fully Insured, Customer Focused, Outstanding Design Team Here To Support Your Dream Home.


HOUSE
FOR LEASE
Warden &
401/Sheppard
647-296-0596
www.ParaCity.ca
PROPERTY FEATURES
• Living Room
• Dining Room
• 3 Bedroom
• 2 Bathroom
• Smoke and pet free home
• Bungalow House
Bright living & dining room with walkout to south facing patio & fenced yard. Nice hardwood floors, eat-in kitchen with stainless steel appliances. Spacious bedrooms, desirable side door entrance to partially finished basement with new broadloom, fresh paint, cozy wood burning fireplace & extra bath with separate shower. Plenty of space to make room for the extended family. Quiet street


APARTMENT
FOR RENT
Enjoy Brand New Never Lived In Immaculate 2 Bedroom, 2 Bathroom Suite In Luxury Condo In Prime Scarborough Location. Excellent Location, Minutes To TTC, Highway 401, Go Train
FACILITIES
MORE INFORMATION
647- 296- 0596
www.ParaCity.ca
KENNEDY & 401


Get in Touch
Para Tisikulasingam
Real Estate Agent
HomeLife/GTA Realty Inc.
Brokerage*
(647) 296-0596
HOMELIFE
HIGHER STANDARDS
HOME LIFE / GTA REALTY INC.,Brokerage*
*Independently Owned and Operated
5215 Finch Ave E, Unit 203, Toronto, ON M1S 0C2
O:416.321.6969 | F: 416.321.6963
Raja Mahendran
Broker/Owner
HomeLife/GTA Realty Inc.
Brokerage*
(416) 321-6969



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# 'ஒப்பரேசன் துவாரகா' - பின்னணி என்ன?




தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவரும், உலகெங்கும் வாழும் தமிழ் மக்களால் தேசியத் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டவருமான வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் புதல்வி துவாரகா உயிருடன் இருப்பதாக வெளியாகியுள்ள செய்தி தொடர்ந்து பரபரப்பை ஏற்படுத்திய வண்ணமே உள்ளது.

துவாரகா என்று தன்னைக் கூறிக் கொள்ளும் பெண்ணின் உரை கடந்த மாவீரர் தினத்தன்று ஒரு காணொளியாக வெளிவந்து மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

துவாரகா வெளிநாடு ஒன்றில் வாழ்கின்றார் என்று சொல்லப்படுகின்ற தகவலை தமிழ் மக்கள் மூன்று விதமாகப் பார்க்கின்றனர். குறித்த பெண், தலைவர் பிரபாகரனின் மகள் துவாரகாவாக இருக்கலாம் என்று நம்புகின்றவர்கள் ஒரு சிறுதொகையினர். அந்தப் பெண் துவாரகாதானா அல்லது போலியா என்று உறுதியாக கூற முடியாமல் இரண்டும் கெட்டான் நிலையில் யோசித்து தடுமாறுவோரும் இருக்கின்றனர்.

அதேவேளை, குறித்த பெண் தலைவர் பிரபாகரனின் மகள் துவாரகா இல்லை என்று உறுதியாக சொல்பவர்களும் உள்ளனர். அவர்கள் தாயகத்தில் வாழ்கின்ற மக்களும், விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்த முன்னாள் போராளி களும் ஆவர். இறுதிக்கட்டப் போரின் பின்னர் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்ற முக்கியமான போராளிகளும் இதனை நம்பவில்லை.

தலைவர் பிரபாகரனின் நெருங்கிய மெய்ப் பாதுகாவலர்களாக இருந்த- தற்போது வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்றவர் களான முன்னாள் போராளிகள் துவாரகா என்று தற்போது தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் பெண் போலியானதொரு உருவாக்கம் என்றே கூறுகின்றனர்.



அவர்களின் கருத்துக்கள் தற்போது ஊடகங்களில் வெளிவந்த வண்ணமுள்ளன. இந்தப் போலி உருவாக்கத்தின் உள் நோக்கம், பின்னணிகள் குறித்து ஆராயும் நடவடிக்கைகளும் வெளிநாடுகளில் உள்ள முன்னாள் போராளிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில், தமிழ் மக்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தியது பிரபாகரனின் துணைவி யாருடைய சகோதரியான அருணா என்று அழைக்கப்படும் பெண்ணே. அவர் காணொளி மூலமாக வெளியிட்டுள்ள தகவலில் தலைவர் பிரபாகரன், அவரது துணைவியார் மதிவதனி பிரபாகரன், மகள் துவாரகா ஆகியோர் உயிருடன் இருப்பதாகவும், தான் நேரில் சென்று அவர்களை சந்தித்ததுடன், அவர்களுடன. இருந்து உணவருந்தி விட்டு வந்ததாகவும் தெரிவித்திருக்கின்றார்.

இறுதிப் போரின்போது படையினரால் படுகொலை செய்யப்பட்டதாக கூறப்படும் தலைவரின் மகன் பாலசந்திரனும் உயிருடன் இருப்பதாக கூறப்பட்டு வருவதாகவும் வெளிநாடு ஒன்றில் உள்ள முன்னாள் போராளி ஒருவர் ஊடகம் ஒன்றிற்கு தெரிவித்துள்ளார்.

துவாரகா என்ற அந்தப் பிள்ளையை சிறுவயதிலிருந்தே தெரிந்தவர்கள் பலர் இருக்கின்றனர். தலைவர் பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலர்களாக இருந்தவர்களை விடவும் அவரது குடும்பத்திற்கு பாது காப்பாக இருந்தவர்களும் இது 'போலி நாடகம்' என உறுதியாகக் கூறுகின்றனர். துவாரகாவுடன் ஒன்றாக பாடசாலையில் கற்றவர்கள், அவருக்கு கற்பித்த ஆசிரியர்கள் எனப் பலர் தாயகத்தில் உள்ளனர். அனைவரும் துவாரகாவின் முகத்தையும், அந்தக் கண்களையும், அவரது குரலையும் இன்னும் மறந்து விடவில்லை.

இப்போது ஆராயப்பட வேண்டியது என்னவெனில், இந்தப் போலி நாடகத்திற்கு காரணம் என்ன? இதன் பின்னணியில் இருப்பவர்கள் யார்? என்பதையே. நிச்சயமாக பணம் திரட்டும் நோக்கத்துடன் புலம்பெயர்ந்த நாடு களிலுள்ள சில மோசடியாளர்களே இதன் பின்னணியில் இருப்பதாகத் தெரிகின்றது.

ஏனெனில், தலைவர் பிரபாகரனின் குடும்பத்தை பாதுகாப்பதற்காக என்று கூறிக்கொண்டு வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடம் பணம் திரட்டும் நடவடிக்கை கள் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிய வருகின்றது. தலைவர் பிரபாகரன் உடல் நலக்குறைவாக இருப்பதாகக் கூறி சிலரிடம் பணம் வாங்கப்பட்டுள்ளதாகவும் புலம்பெயர்ந்து வாழும் முன்னாள் போராளிகள் ஊடகங்களில் தெரிவித்துள்ளனர்.

தாங்கள் துவாரகா உள்ளிட்ட தலைவரின் குடும்பத்தை சந்திக்க வேண்டும் என அருணா உள்ளிட்டவர்களிடம் கோருகின்ற போதும் அது தட்டிக்கழிக்கப்படுவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

தலைவர் பிரபாகரனின் உடன் பிறந்த அண்ணன் வேலுப்பிள்ளை மனோகரனின் மகன் கார்த்திக் மனோகரனும் தனது கருத்துக்களை ஊடகங்களிடம் வெளிப் படுத்தி வருகின்றார். துவாரகா என்று தற்போது காட்டப்படும் முகம் உண்மையா? போலியா? என்பதை மரபணு பரிசோதனை மூலமாக விஞ்ஞான பூர்வமாக உறுதிப்படுத்த முடியும் எனவும், அதற்கு தாங்கள் தயாராகவுள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

இந்த மோசடியில் பணம் திரட்டும் நடவடிக்கை ஒருபுறமிருந்தாலும், வேறு புலனாய்வுத் திட்டங்கள் உள்ளனவா என்பதையும் ஆராய வேண்டியுள்ளது. தலைவர் பிரபாகரன் உயிருடனிருப்பதாக தமிழ்நாட்டிலுள்ள பழ.நெடுமாறன் போன்ற தலைவர்கள் இன்று வரையும் கூறிக் கொண்டிருக்கின்றனர். இதற்குப் பின்னணி யில் இந்திய புலனாய்வுப் பிரிவான றோ செயற்படுவதாகவும் சொல்லப்படுகின்றது.

ஆனால், இலங்கை அரசாங்கம் இது பற்றியெல்லாம் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. துவாரகா என்று கூறப்படும் பெண்ணின் காணொளி உரை குறித்து அண்மையில் ஊடகவியலாளர் ஒருவர் இலங்கையின் அமைச்சர் ஒருவரிடம் வினவிய போது, 'இதனால் நாட்டின் பாதுகாப்பு குறித்த பிரச்சினை எதுவுமில்லை' என ஒரு வரியில் அவர் பதிலளித்தார். இருப்பினும் இலங்கையின் பாதுகாப்புத் தரப்பினர் இது குறித்து ஆராயாமலிருக்க மாட்டார்கள்.

எது எவ்வாறாயினும், இந்த போலி நாடகம் நீண்ட நாட்கள் அரங்கேறாது என்பதையும், உண்மை விரைவில் வெளி வரும் என்றும் எதிர்பார்க்கலாம்.




விளம்பரம்
VLAMBARAM
33ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: சுதர்சினி D.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
www.tamilvanakkam.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# மத்திய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

அறிக்கையில் மேலதிகமாக $15 பில்லியன் கடன் உதவி 2025-2026 நிதியாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வாடகை அடுக்குமாடி குடியிருப்புக்களை உருவாக்க வழங்கும் கடன் உதவி $40 பில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது.



இதன்மூலம் கனடா முழுவதும், மேலதிகமாக 30,000இற்கு மேற்பட்ட புதிய வீடுகள் அமைக்கப்படும். 2031-2032 நிதியாண்டில் இத்திட்டத்தின் மூலம் மொத்தமாக 101,000 புதிய வீடுகள் அமைக்கப்படும். இந்த வாடகை அடுக்குமாடி குடியிருப்புகளை உருவாக்க அமைக்கப்பட்டுள்ள கடன் உதவியை கனடாவில் உள்ள எல்லா மாகாண மற்றும் பிராந்திய அரசுகளும் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த இலையுதிர்காலப் பொருளாதார அறிக்கை ஒரு புதிய "கனடிய அடமான சாசனத்தை" (Canadian Mortgage Charter) அறிவித்துள்ளது. இது கனடிய நிதி நிறுவனங்கள் எவ்வாறு கனடியர்களுக்கு அடமானம் வழங்கும்போது இணைந்து செயல்பட வேண்டும் என அறிவுறுத்துகிறது. இதன்மூலம், அடமானக் கடனை அடைக்க முடியாமல் அவதிப்படுபவர்களுக்கு அடமானக் கடனுக்குரிய காலஅளவை தற்காலிகமாக நீட்ட அனுமதிக்கும் சில நடவடிக்கைகளுக்கு அறவிடப்படும் தண்டனைக்கட்டணங்களை தள்ளுபடி செய்ய அனுமதிக்கும். அடமானக்கடனைப் புதுப்பிக்கும்போது ஏற்கனவே காப்பீடு செய்யப்பட்ட அடமானம் வைத்திருப்போர் மீண்டும் காப்பீடு செய்ய குறைந்தபட்ச தகுதி பெற வேண்டிய அவசியம் இல்லாமல் செய்ய அனுமதிக்கும்.

நிதி நிறுவனங்கள் அடமானம் வைத்திருப்பவருடன் அவர்களது அடமானம் புதுப்பிப்பது தொடர்பான விடயங்களை அடமானம் புதுப்பிக்கப்பட்ட, ஆறு மாதங்களுக்கு முன்னர் தொடர்புகொண்டு தெரிவிக்க அறிவுறுத்தும். அடமானக் கடன் சுமையால் அவதிப்படுபவர்களுக்குத் தேவைப்படும்போது மொத்தத்தொகையாக (Lump sum payments) பணம் செலுத்த விரும்பினால் அவர்களுக்குரிய அபராதப் பணத்தை தள்ளுபடி செய்ய அனுமதிக்கும். அடமானக் கடன் சுமையால் அவதிப்படுபவர்களுக்கு அடமான நிவாரண நடவடிக்கைகளுக்கு வட்டிக்கு வட்டி வசூலிக்க அனுமதிக்காது.

நீண்டகால வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உதவும்முகமாக இப்பொருளாதார அறிக்கை குறுகிய கால வாடகைக்கு வழங்க தமது குடியிருப்புகளை வைத்திருப்பவர்களை அவதானிக்க புதிய விதிகளை வகுத்துள்ளது.

2020ஆம் ஆண்டில் ரொறொன்ரோ, மொன்றியல் மற்றும் வன்கூவர் நகரில் மட்டுமே 18,900 குடியிருப்புகள் குறுகிய கால வாடகைக்கு வழங்குவதற்காக அதன் உரிமையாளர்களால் நீண்டகால வாடகைக்கு விடாமல் வைக்கப்பட்டிருந்தன. இது தற்போது பலமடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. இப்பொருளாதார அறிக்கை குறுகிய கால வாடகை வருமானத்தை வருமானவரிக்குக் காட்டும் போது அவர்கள் வருமானவரி விலக்குக்காக காட்டும் செலவுகளை மட்டுப்படுத்தியுள்ளது.

குறுகிய கால வாடகைக் குடியிருப்புகளை வைத்திருப்போர் அதற்குரிய அனுமதிப் பத்திரத்தை நகரசபை மற்றும் மாகாண அரசிடம் இருந்து பெற்றிருக்கா விட்டால் அவர்களுடைய வருமானத்தில் இருந்து எந்தவிதமான செலவுகளுக்கும் 2024 ஜனவரி 01இற்குப் பிற்பாடு வரிவிலக்குப் பெற முடியாது.

நகரசபைகள் குறுகிய கால வாடகை குடியிருப்புகளை வைத்திருப்போருக்கு மிகக் கடுமையான விதிகளை அமல் படுத்த உதவும் முகமாக இந்தப் பொருளாதார அறிக்கை $50 மில்லியனை நகரசபைகளுக்கு வழங்குகிறது. இதன் மூலம் இந்தக் குறுகிய கால வாடகை குடியிருப்புகளை வைத்திருப்போர் அவற்றை நீண்டகால வாடகைக்கு வழங்க ஊக்குவிக்கப்படுவர் என மத்திய அரசு எதிர்பார்க்கிறது.



மத்திய அரசின் இலையுதிர்காலப் பொருளாதார அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட $20.8 பில்லியன் அதிகப்படியான செலவினங்களை பற்றிக் கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவரான Pierre Poilievre, இவ் அறிக்கை தற்போதைய பொருளாதார நிலையில் மேலதிக செலவினங்களை அறிவித்துள்ளது, ஓர் அருவருப்பானது (disgusting) இவ்வாறு வீணாக $20.8 பில்லியன் செலவினத்தை உருவாக்கிய லிபரல் கட்சியின் இந்த அறிக்கை பற்றி சுருக்கமாகக் கூறுவதனால், விலைகள் அதிகரித்துள்ளன, வாடகை அதிகரித்துள்ளது, கடன்சுமை அதிகரித்துள்ளது, வரிகள் அதிகரித்துள்ளன, அத்துடன் லிபரல் அரசின் நேரமும் முடிந்து விட்டது" என்றார்.

அவர் மேலும் கூறுகையில், "பொது அறிவுக் கொள்கையுடைய பழமைவாதக் கட்சியினர் இந்தக் கேவலமான அறிக்கைக்கு எதிராகவே தமது வாக்குகளை அளிப்பர். எட்டு வருடமாக தொடர்ந்து ஆட்சியில் இருக்கும் இப்பிரதமர் இப்பொருளாதார அறிக்கை மூலம் நாட்டின் பணவீக்கத்தை மேலும் $20 பில்லியனால் அதிகரித்துள்ளார். இது வட்டிவீத உயர்விற்கு வழிவகுக்கும்" என்றார்.

இப்பொருளாதார அறிக்கை குறித்து கருத்துத் தெரிவித்த புதிய ஜனநாயகக் கட்சித்தலைவர் Jagmeet Singh மத்திய



அரசு போதிய அளவு செலவினங்களை செய்யவில்லை எனக் குறை கூறினார். அவர், "கனடியர்கள் அனுபவிக்கும் அவசரத் தேவையை இந்த அறிக்கை பூர்த்தி செய்யவில்லை. அவர்களின் தேவைகளை இச்செலவுகள் பூர்த்தி செய்யவில்லை. கனடியர்கள் மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். இவ்வறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்டவையும் காலதாமதப்படுத்தப்பட்டுள்ளன" என்றார்.

## சிரிப்பின் அருமை



**இன்பத்தில் சிரிப்பவன் அதிர்ஷ்டசாலி**
**துன்பத்தில் சிரிப்பவன் ஞானி**
**கற்பனையில் சிரிப்பவன் கவிஞன்**
**கட்டவுடன் சிரிப்பவன் காரியவாதி**
**தெரிந்து சிரிப்பவன் நடிகன்**
**தெரியாமல் சிரிப்பவன் ஏமாளி**
**ஓயாமல் சிரிப்பவன் பைத்தியக்காரன்**
**ஓடவிட்டு சிரிப்பவன் வஞ்சகன்**
**உட்கார்ந்து சிரிப்பவன் சோம்பேறி**
**உழைப்பில் சிரிப்பவன் உயர்ந்த மனிதன்.**



# நாமும் நமது இல்லமும் 644

## கனடிய மத்திய வங்கியின் மாறாத வட்டிவீதம்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனடிய மத்திய வங்கி குழுவின் இந்த வருடத்தின் (2023), கடைசி சந்திப்பு புதன்கிழமை, டிசெம்பர் 06, 2023 அன்று நிகழ்ந்தது. இதன் தொடர்ச்சியாக வங்கி, தனது வட்டி வீதத்தை மாற்றாமல் 5% என்ற பெறுமதியில் வைத்துள்ளது.

கடந்த மூன்று தடவையும் எதுவித மாற்றமும் இந்த நிலைப்பாட்டினால் எதிர் காலத்தில் மாறாத வட்டி வீதம் (closed mortgage inerest rate) குறையக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்படுகின்றது.

உலகளாவிய பொருளாதார மந்தநிலையும் பணவீக்கத்தின் இறக்கமும், கனடியப் பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்த லாம். ஏற்கனவே கனடியர்களின் மாதாந்தக் கொடுப்பனவில் பெரிய இறுக்க மான நிலையில் உள்ளதனைக் காணக் கூடியதாக உள்ளது. இதனால் 2024ஆம் ஆண்டில் வட்டிவீத இறக்கத்தை எதிர் பார்க்கலாம். ஏறக்குறைய கடந்த இரு வருடங்கள் கனடிய வட்டிவீதம் ஒரே பக்கத்தில், அதாவது மேல்நோக்கியே சென்றுகொண்டு வந்ததனை விளம்பர வாசகர்கள் அறிவீர்கள்.

2023இன் 3ஆது காலப்பகுதியில் (3rd Quarter) பொருளாதார சுருக்கம் ஏற் பட்டது. அதிக வட்டிவீதம் கனடியர்களின் செலவில் முடக்கத்தை ஏற்படுத்தியது. வருமானத்தின் பெரும்பகுதி அடமானத்திற் கும், வாடகைக்கும் செல்வதனைக் காணலாம். குறைந்தளவான தொழில்கள் ஆரம்பிப்பதும், அதிகரிக்கும் வேலையில் லாதோர் எண்ணிக்கையும் பொருளாதார இறுக்கத்தை ஏற்படுத்துகின்றது.

பணவீக்கம் இறங்கினாலும், ஆதனத்திற் குரிய செலவும் வாடகை அதிகரிப்பும் ஆதனச் செலவுகளும் அதிகரிப்பதனைக் காணலாம். இதனால் ஆதனத்தில் முதலிடும் முதலீட்டாளர்கள் பொறுத்து இருப்பதனையும் காணலாம். இது ஆதன வியாபாரத்திலும் மந்தநிலையை ஏற்படுத்தும்.

ஏற்கனவே 2022 நவம்பர் உடன் ஒப்பிடும் போது 2023 நவம்பரின் வியாபாரம் குறைந் துள்ளது. சராசரி ஆதனவிலை ஏறக் குறைய $1.08 மில்லியனாக இரு குறிப்பிட்ட காலத்திலும் ஏற்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் அடுத்த சந்திப்பு ஜனவரி 24, 2024 ஆகும். அப்பொழுது ஏற்படுத்தும் முடிவு எதிர்கால, பொருளாதாரத்தை கட்டியம் கூறும்.



தொடர்ச்சியான, எதிர்மறையான பொருளா தார வெளிப்பாடுகளினால், வட்டிவீத அதிகரிப்பு சாத்தியமில்லை என பொருளா தார ஆய்வாளர்கள் எதிர்வு கூறியுள்ளனர். கடந்த இரு வருடங்களில் (2022-2023)இல் 10 தடவை ஏற்படுத்திய மத்திய வங்கியின் வட்டிவீத அதிகரிப்பு, வங்கி எதிர்பார்த்தது போல பொருளாதார இறக்கம் தொடர்கின்றது. தொழில் வாய்ப்பு கிடைக்காமல் (Unemployment rate) இந்த வருடத்தின் ஆரம்பத்தில் 5%இலிருந்து 5.8% அதி கரித்துள்ளது. எனினும் இதுவரை கனடியப் பொருளாதாரம், பொருளாதார சுருக்கத்தை (Recession) அடைய வில்லை. எனினும், பொருளாதார இறக்கத்தைக் காணக்கூடியதாக உள்ளது.

ரொறொன்ரோ டொமினியன் (Toronto Dominion) வங்கியின் பொருளாதார விற்பன்னர் ரிஷி சொன்டி (Rishi Sondhi)இன் அறிக்கையின் பிரகாரம் (12.07.2023) கனடா ரீதியில் 2023இன் இறுதிக்காலப்பகுதிக்கும் 2024இன் முதல் காலப்பகுதிக்கும் இடையில் ஆதனவிலை குறைந்தது 10% இறக்கம் ஏற்படலாம் என தெரிய வருகின்றது.

இத்துடன் 2024இன் இரண்டாவது, மூன்றா வது காலப்பகுதியில் ஆதனவிலையில் அதிகரிப்பு ஏற்படும் என தெரிய வருகின்றது. அத்துடன் கனடிய மத்திய வங்கியின் ஆளுநர் திரு. ரிவ் மக்கெலம் (Tiff Macklem) அண்மையில் தெரிவித்த தின்படி, கனடிய மத்திய வங்கியின் குறிக்கோள் பணவீக்கம் 2% (Inflation rate) என்ற எண்ணிக்கையை அடையும் முன்பே வட்டிவீதத்தில் இறக்கம் ஏற்படுத் தப்படும் எனத் தெரிய வருகின்றது.

இதனால் 2024இன் இளவேனிற் காலத்திற்கு முன்பாக வட்டிவீதத்தில் இலகுத்தன்மையை எதிர்பார்க்கலாம்.

---

## கனடாவில் வெளிவந்த தமிழ் நூல்கள்

### குரு அரவிந்தன்

கனடாவில் கோடைகாலம் வந்தால் நூல் வெளியீட்டு விழாக்கள் தொடர்ந்து நடை பெறுவதுண்டு. அணிந்துரை அல்லது வாழ்த்துரை எழுதவோ அல்லது வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றவோ சில எழுத்தாளர்கள் தங்கள் புத்தகங்களைக் கொண்டுவந்து தருவதுண்டு. அப்படி என்னிடம் சமீபத்தில் கிடைத்த அந்த நூல்களை எப்படியாவது ஆவணப்படுத்திவிட வேண்டும் என்ற எண்ணம் எனக்குத் தோன்றியது. எனக்குக் கிடைத்த நூல்களை மட்டும், சர்வதேச ஆர்வலர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதாலும், மற்றும் அடுத்த தலைமுறை யினருக்குப் பயன்படும் என்பதாலும் இங்கு ஆவணப்படுத்துகின்றேன்.

எழுத்தாளர் அகில் சாம்பசிவம் தொகுத்து வெளியிட்ட 'இலக்கியவெளி' சிறப்புமலர் 03-12-2023ஆம் ஆண்டு ஸ்காபரோவில் வெளியிடப்பெற்றது. எழுத்தாளர் வ.ந. கிரிதரனின் 'ஒரு நகரத்து மனிதனின் புலம்பல்' (கவிதைத்தொகுப்பு), 'நவீன விக்கிரமாதித்தன்' (நாவல்), வ.ந. கிரிதரன் கட்டுரைகள் ஆகியன 19-11-2023ஆம் ஆண்டு ஸ்காபரோவில் வெளியிடப் பெற் றது. இதேதினத்தில் கலாநிதி சண்முகம் வெற்றிவேல் எழுதிய 'இலக்கியத்தில் உளவியல்' 'தமிழர் பண்பாட்டு அடையாளச் சிக்கல்கள்' ஆகிய நூல்கள் ஸ்காபரோவில் வெளியிடப்பெற்றன.

திருமதி ஆதிலட்சுமி சிவகுமார் அவர் களின் 'ஒற்றை வானமும் ஒரு பறவையும்' (கவிதைத் தொகுப்பு) 'பொன்வண்டு' னின் 'நினைவு நல்லது' நூல் அறிமுக விழா 4-11-2023ஆம் ஆண்டு ஸ்காபரோ வில் நடைபெற்றது. எழுத்தாளர் சம்பந்தனின் 'விழியும் துளியும்' என்ற சிறுகதைத் தொகுப்பு 14-10-2023ஆம்





(சிறுகதைத் தொகுப்பு) ஆகியன கனடியத் தமிழ் வானொலியால் 12-11-2023ஆம் ஆண்டு ஸ்காபரோவில் வெளியிடப் பெற்றது. கனடா தமிழ் கவிஞர் கழகத்தின் கவிச்சரம் இதழ் 05-11-2023ஆம் ஆண்டு ஸ்காபரோவில் வெளியிட்டு வைக்கப்பட் டது. ஒலி, ஒளி ஊடகர் பி. விக்னேஸ்வர ஆண்டு ஸ்காபரோவில் வெளியிடப் பெற்றது. உரையாளர் பொன்னையா விவேகானந்தனின் 'தமிழ்மொழிக் கல்வி,' 'தமிழ்ப்பண்பாடு,' 'நாடகங்கள்,' 'பெயர்வுத் தமிழ்ச்சமூகம் - இருப்பும் இடர்களும்' ஆகிய நூல்கள் 08-10-2023ஆம் ஆண்டு ஸ்காபரோவில் வெளியிட்டு வைக்கப்பெற்றது.

மாவை நித்தியானந்தனின் 'இனிச் சரிவராது,' 'ஐயா லெக்சன் கேட்கிறார்' ஆகிய நூல்கள் வெளியிட்டும், 'சின்னச் சின்ன நாடகங்கள்,' 'சட்டியும் குட்டியும்,' 'நாய்க்குட்டி ஊர்வலம்' ஆகிய மூன்று நூல்கள் ஸ்காபரோவில் 07-10-2023ஆம் ஆண்டு அறிமுகம் செய்தும் வைக்கப் பட்டன. மறுமலர்ச்சி மன்றத்தின் சிறு கதைப் போட்டியில் தெரிவான சிறுகதை கள் அடங்கிய 'மறுமலர்ச்சி' நூல் அறி முகவிழா ஸ்காபரோவில் 1-10-2023 ஆம் ஆண்டு நடைபெற்றது. வீணை மைந்தன் கே.ரி. சண்முகராஜாவின் 'தமிழ் சினிமா வும் நடிகர் திலகமும்,' 'மண்ணும் மனசும்,' 'தமிழ் சினிமாவில் மகாகவி பாரதி பாடல்கள்,' 'மறக்கத் தெரியாத மனசு' ஆகிய நூல்களின் அறிமுகவிழா ரொறொன்ரோவில் 23-09-2023ஆம் ஆண்டு நடைபெற்றது. இதே தினத்தில் கனடா தொல்காப்பிய மன்றத்தின் 'தொல்காப்பிய ஆண்டுமலர்' ஸ்காபரோவில் வெளியிட்டு வைக்கப்பெற்றது.

எழுத்தாளர் அகணி சுரேஸ் அவர்களின் 'குவலயம் ஆளும் குடிசார் பொறியியல்' என்ற கட்டுரைத் தொகுதி 13-8-2023ஆம் ஆண்டு ஸ்காபரோவில் வெளியிட்டு வைக்கப்பெற்றது. தீபச்செல்வனின்

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)

# Happy Holidays!



**EDDIE WOO**

Broker of Record



**RAJA MAHENDRAN**

Broker /Owner

பண்டைய காலத்திலிருந்து இன்றுவரை மக்கள் வாழ்வில் பல விடயங்கள் அவற்றின் தன்மைக்கும், சிறப்பிற்கும் ஏற்ப மக்கள் மனதில் நிலைத்து விட்டன. அவற்றில் சில.....

அன்பிற்கு ....... தாய்
அறிவிற்கு........ தந்தை
ஆசைக்கு......... ஹிட்லர்
இசைக்கு.......... இராவணன்
ஈகைக்கு........... பாரி
உண்மைக்கு........ அரிச்சந்திரன்
ஊக்கத்திற்கு........ எறும்பு
எளிமைக்கு ........... காந்தி
ஏற்றத்திற்கு......... முயற்சி
ஐயத்திற்கு .......... ஆரியர்
ஒற்றுமைக்கு........ காகம்
ஒய்வின்மைக்கு.... சுற்றும் பூமி
ஔவியத்திற்கு...... புறம் கூறாமை

ஆதனம் விற்க, வாங்க, முதலிட
இலவச ஆலோசனை பெறுவதற்கு.....

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

HOMELIFE HIGHER STANDARDS

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969** * Independently owned and operated.

# நானிலம் போற்றும் நட்பு - 35



- அகணி -
authorakani@gmail.com

"செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று." (அதிகாரம் தீ நட்பு, குறள் 815) என்ற குறளிற்கு "காவல் செய்து வைத்தாலும் காவல் ஆகாத கீழ்மக்களின் தீய நட்பு, ஒருவனுக்கு ஏற்படுவதை விட ஏற்படாமலிருப்பதே நன்மையாகும்." என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"நண்பர்களுக்குத் தக்க சமயத்தில் உதவாத கீழ்மக்களின் நட்பைப் பெறுவதைவிடப் பெறாமல் இருப்பதே நல்லது" என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"அற்பர்களின் நட்பைப் பெறுவதைவிட, பெறாமலிருப்பதே நலம்" என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"கீழ்மக்களின் நட்பு, பாதுகாப்பாக அமையாத தீயதன்மை கொண்டது என்பதனால், அவர்களுடன் நட்பு ஏற்படுவதைவிட, ஏற்படாமல் இருப்பதே நலம்." என்று உரையாசிரியர் கலைஞர் அவர்கள் உரை தந்துள்ளார்.


தேவையான பொழுதில் உதவாத கீழ்மக்களின் நட்பினை பெறாமலிருப்பதே நல்லது என்ற கருத்தை இந்தக் குறள் எடுத்துக் கூறுகிறது.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் இருபத்தைந்தாவது பாடலைக் கவனிப்போம்.
இது கபிலர் பாட்டு. இது குறிஞ்சித்திணை சார்ந்தது.

தலைவி தன்னை மணந்து கொள்ளாமல் காலம் கடத்தும் தலைவன் போக்கைக் கண்டு வருந்தினாள். அவனே இரக்கங் கொண்டு என்னை மணந்து கொண்டால்தான் உண்டு. இன்றேல் எனக்கு உதவி செய்வதாகச் சாட்சி கூறுவார் யாரும் எனக்கு இல்லை என்று வருந்திக் கூறியது இப்பாடல். தலைவியின் கூற்று.

"யாரும் இல்லைத் தானே கள்வன்
தான்அது பொய்ப்பின் யான்எவன் செய்கோ
தினைத்தாள் அன்ன சிறுபசும் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே."
இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.

தோழியே அவன் என்னைக் களவு மணம் புரிந்து கொண்ட நாளிலே சாட்சி சொல்லக் கூடியவர் எவரும் இல்லை. தலைவனாகிய கள்வன் மட்டுந்தான் இருந்தான். அவன் அப்பொழுது உரைத்த உறுதி மொழியை இப்பொழுது மறுத்துப் பொய் புகல்வானாயின் யான் என்னதான் செய்வேன். நீரோடையின் கரையிலே உட்கார்ந்து தன் உணவுக்காக ஆராமீனின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தினையின் அடியைப் போன்ற சிறிய பசுமையான கால்களையுடைய நாரைதான் இருந்தது.




தலைவன் தான் உறுதிமொழி கூறியபடி இன்னும் மணந்து கொள்ளவில்லை. நீதான் இதற்கு வழி செய்ய வேண்டும் தோழியிடம் கூறுகிறாள் தலைவி.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் இருபத்தாறாவது பாடலைக் கவனிப்போம்.
இது வெள்ளிவீதியார் பாடிய பாட்டு. இது குறிஞ்சித்திணை சார்ந்தது.
நற்றாயும், செவிலித் தாயும் "தலைவியின் நோய்க்குக் காரணம் தெய்வமே" என்று கட்டுவிச்சி கூறியதை நம்பியபோது தோழி உண்மையைக் கூறி அறநெறியிலே நிற்பதைக் காணமுடிகிறது.



"அரும் அற மலர்ந்த கரும்கால் வேங்கை
மேக்குஎழு பெருஞ்சினை இருந்த தோகை
பூக்கொய் மகளிரின் தோன்றும் நாடன்,
தகாஅன் போலத் தான்தீது மொழியினும்
தன்கண் கண்டது பொய்க்குவது அன்றே
தேக் கொக்கு அருந்தும் முள்எயிற்றுத் துவர்வாய்
வரைஆடு வன்பறழ்த் தந்தைக்
கடுவனும் அறியும் அக்கொடியோனையே"

ஒரு நாள் தலைவியைப் பெற்றெடுத்த அன்னையும், அவளை வளர்த்த செவிலித் தாயும் அவளுடைய போக்கை உற்று நோக்கினர். நடையிலும், பார்வையிலும் தோற்றத்திலும் மாறுதலைக் கண்டனர். இந்த மாறுதலுக்கு என்ன காரணம் என்று தலைவியைக் கேட்டனர். அவள் ஒரு பதிலும் உரைக்கவில்லை. தோழியைக் கேட்டனர்: அவளும் தகுந்தபடி விடை தரவில்லை. உடனே அக்கால வழக்கப்படி கட்டுவிச்சியை (குறத்தியை) அழைத்தனர். அவளிடம் தலைவியின் வேறுபாட்டிற்குக் காரணம் என்னவென்பதைக் கண்டறிந்து சொல்லும்படி குறி கேட்டனர். கட்டுவிச்சி தலைவியின் வேறுபாட்டுக்குக் காரணம் தெய்வக் கோளாறுதான் என்று கூறினாள். இவளுடைய மாறுதல் போக வேண்டுமாயின் அத்தலைவனைத் தேடி இவளுக்கு மணம் புரிந்து வைப்பதுதான் நீங்கள் மேற்கொள்ள வேண்டிய முயற்சி என்பதைக் குறிப்பாகக் கூறினாள் தோழி. தோழியின் இக்கூற்றை விளக்குவதே இப்பாடல்
இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.

"நம் தலைவிக்கு இத்தகைய மாறுதலைத் தந்த அந்தக் கொடியவனாகிய தலைவனை ஆண் குரங்கும் அறியும். இனிய மாங்கனியை அருந்துகின்ற கூர்மையான பற்களையுடைய, சிவந்த வாயையுடைய, மலையிலே ஓடி விளையாடுகின்ற வலிமையுள்ள குட்டியின் தந்தையாகிய அந்த ஆண் குரங்கு நன்றாக அறியும். அந்தக் குரங்கு கள்ளங் கபடமற்றது. நடுநிலை தவறாமல் நடந்து கொள்ளும் தன்மையுள்ளது. தன் கண்ணாற் கண்டதை மறைக்காமல் சொல்லும் குணமுள்ளது. தன் கண்ணாலே கண்டதை எந்தக் காரணத்தாலும் இல்லையென்று மறுத்துப் பொய்யுரைக்காது"

வேங்கை மரத்தின் மேலிருந்த ஆண் மயிலுக்குப் பூக் கொய்யும் பெண்களை உவமையாகக் கூறப்பட்டது. இந்த உவமையிலே ஒரு சிறந்த கருத்துண்டு. வேங்கை மரத்திலே உள்ள மயில் அந்த மரத்திற்கு அழகைத் தருகின்றது. அதுபோல அவனும் இவளுடன் இணைந்திருப்பானாயின் இவளுக்கு அழகைத் தருவான். அமைதியைத் தருவான். இவள் நோயைத் தணிப்பான். இன்பத்தைத் தருவான் என்ற கருத்து இந்த உவமையில் மறைந்து கிடக்கின்றது.


இப்பொழுது குறுந்தொகையில் வரும் இருபத்தேழாவது பாடலைக் கவனிப்போம்.
இது கொல்லன் அழிசி என்பவர் பாடிய பாட்டு. இது பாலைத்திணை சார்ந்தது. தலைவியின் தனிமையைக் கண்டு வருந்தினாள் தோழி. அவளுக்கு நான் என் துக்கத்தைப் பொறுத்துக் கொண்டிருக்கிறேன். ஆயினும் பசலை நோய் என் அழகை உண்டது என்று கூறினாள். தலைவியின் கூற்று பிரிவின் துயரத்தைச் சொல்லுகிறது.

"கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்ஆன் தீம்பால் நிலத்து உக்குஆங்கு.
எனக்கும் ஆகாது என்ஐக்கும் உதவாது
பசலை உணீஇயர் வேண்டும்,
திதலை அல்குல் என்மாமைக் கவினே."
இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.

"தோழியே நல்ல கறவைப் பசுவின் பாலை அதன் கன்றாவது உண்ண வேண்டும் அல்லது நல்ல கலத்திலாவது கறந்து வைத்திருக்கவேண்டும் அவ்வாறில்லாது அந்த இனிய பால் நிலத்திலே சிந்தி வீணாகி விடுவதால் யாருக்கு என்ன பயன்? இதைப் போலவே என்னுடைய அழகும் ஆகி விட்டது. புள்ளிகள் பொருந்திய அல்குலையுடைய எனது மாமை நிறத்தின் அழகால் ஒரு பயனுமில்லை. என் தலைவனுக்கும் பயன்படவில்லை. எப்படி நல்ல பசுவின் இனிமையான பால் கன்றுக்கும் பயன்படாமல், மக்களுக்குப் பயன்படும் வகையிலே பாத்திரத்திலும் சேராமல் நிலத்திலே சிந்தி வீணாகி விட்டதோ, அதுபோல எனது அழகிய நிறத்தைப் பசலை நோய் உண்ணுவதற்கு விரும்புகின்றது. பசலை நிறம் என்மேற் படர்ந்த காரணத்தால் என் அழகு வீணாயிற்று.

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)

# கனடாவின் ஆதிக்குடிகளின் பண்பாடு மற்றும் கல்வி வரலாறு



T. சிவபாலு

## ஆதிக்குடிகள்




கனடாவில் ஐரோப்பியர் வருவதற்கு முன்னர் பெருந்தொகையான பழங்குடியினர் வாழ்ந்து வந்துள்ளனர். ஆனால் இன்று 630 மேற்பட்ட முதற்குடிச் சமூகங்கள் காணப்படுகின்றனர். இவர்களில் முக்கியமாக “Woodland, Iroquoian, Plains, Plateau, Pacific Coast, The Mackenzie and Yukon ஆகிய இடங்களில் பரந்து காணப்படும் இனக்குழுவிரை இலகுவாக இனங்காணக் கூடியதாக உள்ளது. இவர்களைவிட துருவப்பகுதிகளில் வாழும் எஸ்கிமோ எனப்படும் இன்னுயி இனத்தினர், மற்றும் கனடிய மேற்கு மலைத்தொடர் பிரதேசங்கள், ஒன்ராறியோ மாகாணத்தின் மிஸிஸாக்கா, பிறாம்ரன், ரொறொன்ரோ பிரதேசங்களில் வாழும் இனக்குழுவினர் போன்றோரை உள்ளடக்கி அவர்களது வாழ்வியலையும் வரலாற்றையும் பார்ப்பது பொருத்தமாக அமையும். இதற்கு மேலாக ஐரோப்பியரின் வருகையின் பயனாக இங்கு வாழ்ந்த ஆதிக்குடிகளுடன் ஏற்பட்ட இனக்கலப்பின் காரணமாகத் தோன்றிய மெத்தி இனத்தவர்கள் கியூபெக், மனிரோபா, சஸ்கச்சுவான் போன்ற பிரதேசங்களிலும் வாழ்ந்து வருவதனையும் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது. தங்களை எதிர்த்து நின்றவர்களை நாகரிகமற்ற காட்டு மனிதர்களாகவே ஐரோப்பிய எழுத்தாளர்கள் சித்தரித்துள்ளனர். பழங்குடியினரின் பாரம்பரியம், வரலாறு, பழக்க வழக்கங்கள் பற்றி 1882இல் John McLean எழுதிய The Indian of Canada Their Manners and Customs என்னும் நூலிலும், 1896இல் எழுதிய CANADIAN SAVAGE FOLK – The Native Tribes of Canada என்னும் நூலிலும் கனடாவில் உள்ள ஆதிவாசிகளிடையே காணப்படும் பல்வேறுபட்ட இனக்குழுமங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளதோடு அவர்களின் பழக்கவழக்கங்கள், நடத்தைகள், உளப்பாங்குகள் பற்றி விபரித்துள்ளார். ஒன்பது ஆண்டுகள் அவர்களின் வதிவிடங்களில் தங்கியிருந்து அவதானித்ததோடு கர்ணபரம்பரைக் கதைகள் நம்பிக்கைகள், மருத்துவம், கல்விமுறைகள் பற்றியும் அறிந்து அவர்களின் நாகரிகம் பற்றிய குறிப்புக்களைத் தந்துள்ளார். அவர் தனது நூலுக்கான முகவுரையில் பல்வேறு நூல்களைப் பெற்றுக்கொண்டு அவற்றையும் தனது எழுத்துக்கு ஆதாரமாக்கியுள்ளார். நூற்றுக்கு மேற்பட்ட மொழி களைப் பேசும் இனக் குழுக்கள் வாழ்ந்துள்ளனர்.



அவர்களில் சில இனக் குழுமங்கள் எழுத்துருவைப் பயன்படுத்தி எழுதும் முறையைக் உருவாக்கிக் கொண்டனர். மொழியின் அடிப்படையில் அவர்களது தொடர்பாடல் இடம்பெற்று வந்துள்ளது. எழுத்தைப் பொறுத்தவரை அவர்கள் தங்களுக்கான வரிவடிவங்களை ஆக்கிக்கொண்டு எழுதியும் வந்துள்ளனர். ஐரோப்பியரின் வருகைக்கு முன்னரே அவர்கள் தங்களுக்கான கல்விமுறையை வடிவமைத்துக் கொண்டு அவற்றை இளம் தலைமுறையினருக்குக் கடத்தி வந்துள்ளனர். வேட்டையாடுதல், உணவு சேகரித்தல், உணவு தயாரித்தல், மருத்துவம் என்பன போன்ற வாழ்வியலுக்கான கல்வியை அவர்கள் பெற்றோரிடமிருந்தும், சமூகப் பெரியவர்களிடமிருந்தும் பெற்றனர். சில இனக்குழுக்கள் தமக்கான எழுத்துருவை உருவாக்கிப் பயன்படுத்தியும் வந்துள்ளனர். பிறேயரி மற்றும் மேற்கில் இருந்த மக்களுடன் ஒட்டி உறவாடிய ஜோன் மக்லீன் என்னும் எழுத்தாளர் தனது எழுத்துக்களில் பதிந்துள்ளார். ஆதிக்குடிகளின் பண்பாட்டுக் கோலங்களில் அவர்களது உடை, முகமூடிகள் என்பன முக்கியம் பெற்றுள்ளன. தமக்கான பாரம்பரியங்களை அவர்கள் பாதுகாத்து வளர்த்து வந்துள்ளனர். திருமணம், மரணம் போன்றவற்றில் அவர்கள் சமூகப் பெரியவர்களின் வழி காட்டல்களை மதித்துப் பின்பற்றியும் வந்துள்ளனர். தங்கள் தலைவர் ஒருவர் இறந்துவிட்டால் அந்தப் புதைகுழியில் இரு இளைஞர்களை ஆவிக்கு ஒப்புக் கொடுக்கும் வழக்கத்தையும் கொண்டிருந்தனர். நடுகல் பாரம்பரியம் அவர்களின் வாழ்விய லோடு இரண்டறக்கலந்துள்ளது என்ப தனை இன்று கிடைக்கும் நடுகல்களில் இரந்து அறிந்துகொள்ள முடிகின்றது. சிலைகளை அமைக்கும் முறையையும், தாம் பார்த்தவற்றை வரையும் முறைகளை யும் கற்றுக் கொண்டிருக்கின்றனர். விலங்குகள், பறவைகள் பற்றிய புரிதலுக்கு வரைகலை மிகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஐரோப்பியரின் வருகைக்கு முன்னரான பாரம்பரியக் கல்விமுறை கனடாவில் வாழ்ந்து வந்து பழங்குடிமக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கான கல்வியினை குடும்பப் பெரியவர்களிடமும் சமூகத்தில் முதன்மையானவர்களிடமிருந்தும் கற்றுக் கொண்டனர். வாழ்க்கைக்குத் தேவையான கல்வி என்பது ஒன்று உயிர்வாழ்வதற்கான உணவு, உடை, உறையுளைத் தயாரித்துக் கொள்ளக் கற்றுக் கொள்ளுதல்.



இரண்டாவது பேரிடர்கள், துன்பம், நோய் என்பனவற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ளக் கற்றுக்கொள்ளுதல் என்பன முக்கியம் பெற்று வந்துள்ளன. இதனடிப்படையில் நோக்கும்போது எழுதத் தெரியாத சமூக அமைப்பிலிருந்து தொடர்பு கொள்வதற்கான ஊடகமாக மொழி காணப்பட்டுள்ளது. இது கனடாவில் வாழும் பழங்குடியினரிடம் மட்டுமன்றி உலகெங்கும் உள்ள ஆதிக்குடிகளிடம் காணப்பட்டுள்ளது என்பது வரலாறு காட்டும் உண்மை. மக்கள் அனைவரும் ஏதோ ஒரு வகையில் மற்றவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய தேவை தவிர்க்கமுடியாததாக காணப்பட்டுள்ளது. மனித வாழ்வியல் வரலாற்றில் அவதானித்தல், கேட்டல், வாசித்தல், எழுதுதல் என்னும் கற்றல் முறைகள் படிப்படியாக முன்னேற்றம் கண்டதன் விளைவே இன்றைய நாகரிக வளர்ச்சியாகும்.


பெற்றோர் செய்யும் தொழிலை அவர்கள் செய்முறைகள் மூலம் கற்றுக் கொள்ளவைப்பதும் கற்பதும் இடம்பெற்று வந்துள்ளது. சுற்றுச் சூழலை மையமாகக் கொண்ட சடங்குகள், சம்பிரதாயங்கள் வாழ்க்கை முறையில் படிப்படியாகப் பின்பற்றியவற்றைத் தங்கள் வாரிசுகளுக்குக் கடத்தி வந்துள்ளனர். குடும்ப வாழ்வியலில் குலமுறைக்கல்வியின் தோற்றமாக இவை கொள்ளப்படுகின்றன.

வேட்டையாடுவதற்கு மட்டுமன்றி பாதுகாப்பாக வாழ்வதற்காக ஆபத்தான விலங்குகள், மற்றும் எதிரிகளை எதிர்ப்பதற்கான ஆயுதங்களைச் செய்யவேண்டிய அறிவை வளர்த்துக்கொண்டான். இதன் காரணமாக கூரிய ஆயுதங்களைச் செய்ய முற்பட்டான். இந்தத் தொழில் நுட்பத்தைத் தனது இளைய தலைமுறைக்குக் கடத்தும் கல்விமுறை முக்கியமானதாகப் பின்பற்றப்பட்டது.

உயிர்வாழ்வதற்கான உணவைப் பெற்றுக் கொள்ளுவதற்கும் அவனுக்கு ஆயுதங்கள் தேவைப்பட்டன. இவற்றைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறைகளையும் தனது இளந்தலைமுறையினருக்குக் கற்றுத்தரும் பாரிய பொறுப்பு பெரியவர்களிடம் காணப்பட்டது. முதற்குடி அல்லது பழங்குடியினரிடையே காணப்பட்ட கல்வி முறைகள் மற்றும் செயற்பாடுகள் பற்றி விரிவாக ஆராயப்படவேண்டியுள்ளது.

## இயற்கையும் வழிபாடும்

இயற்கையின் பேரழிவுகளில் இருந்தும் விலங்களின் தாக்கத்தில் இருந்தும் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள தங்களுக்கு மேலான சக்தி உள்ளதாக எண்ணிய மனிதன் அவற்றை வழிபடுவதன் மூலம் அவற்றைச் சாந்தப்படுத்தி வணங்குவதன் மூலமும் அற்றிற்குத் தேவைப்படும் உணவுகள் போன்றவற்றைப் படைப்பதன் மூலமும் பாதுகாப்பாக வாழலாம் என நினைத்தான். இது இயற்கையை வழிபடும் முறையைத் தோற்றுவித்தது. காலப்



போக்கில் இவ்வழிபாட்டுமுறைகளின் தன்மைக்கேற்ப தனித்துவமான சமயக் கொள்கைகளாக வளரத்தொடங்கின. இக் கொள்கைகள்மீது நம்பிக்கை வைத்து கடத்தும் கல்விமுறையையும் ஆக்கிக் கொண்டு வாழத்தலைப்பட்டான்.

நிரந்தரமாக வாழத் தலைப்பட்ட மனிதன் பாதுகாப்பான இருப்பிடத்தை தேர்ந்தெடுத்துக் கொண்டான். குகைகளில் வாழ்ந்தவன் இயற்கையில் கிடைக்கும் இயற்கைப் பொருட்களில் இருந்து வதிவிடத்தை ஆக்கிக்கொள்ளும் திறனைக்

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

Property Management

Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**

***Brampton*** **– Dixie Rd/Countryside Rd - Bsmt**
(1Brm + 1Bath) **[$1,650/m]**
***Brampton*** **– Mcvean/Castlemore - Bsmt**
(1+1Brm + 1Bath) **[$1,750/m]**
***Toronto*** **– Windmere/The Queensway - Townhouse**
(3Brm + 3Bath) **[$4,300/m]**
***Toronto*** **– Prot Union/Lawrence – Townhouse**
(3+1Brm + 2Bath) **[$13,000/m]**
***Markham*** **– HWY 7/Birchmont – Condo**
(2Brm + 2Bath) **[$3,200/m]**
***Markham*** **– McCowan/Denison – Bsmt**
(2Brm + 1Bath) **[$2,200/m]**

**Available for Rent**

***Pickering*** **– Whitevale Rd/Mulberry Lane - Detached**
(4Brm + 4Bath) **[$3,400/m]**
***Pickering*** **– Simcoe /Conlin - Detached**
(4+2Brm + 4Bath) **[$3,450/m]**
***Ajax*** **– Audely Rd S/Bayly St E - Detached**
(4Brm + 4Bath) **[$4,200/m]**
***Oshawa*** **– Simcoe St N/Adelaide Ave E – Bungalow**
(3Brm + 2Bath) **[$2,600/m]**
***Porthope*** **– Walton St/Ontario St– Apartment**
(2Brm + 1Bath) **[$1,999/m]**
***Quinte West*** **– HWY 2/ 2nd Dug Hill Rd – Detached**
(3+2Brm + 3Bath) **[$3,200/m]**

* வீட்டின் விலைகள் தற்போது இறங்கியுள்ளன. ஆனாலும் வாடகை கூடிக் கொண்டே போகிறது.

* நீங்கள் ஒரு வீட்டைத் தற்போது வாங்கி வாடகைக்கு விடுவதன் மூலம் நன்மையடையும் சந்தர்ப்பம் இருக்கிறது.

* வாடகைக்கு கொடுத்த பின் வாடகையை பெறுவதில் சிரமமிருந்தால் அதை ஈடுகட்ட எமது நிறுவனம் (Watson Property Management) **Rental Guarantee** வாடகைக்கான உத்தரவாதத்தைத் தருகின்றது. விபரங்களை அறிய தொடர்பு கொள்ளலாம்.

**Real Estate & Property Management** துறையில் 32 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.

**கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999**

We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.

# அகவை எண்பது காணும் சிந்தனைப்பூக்கள் எஸ். பத்மநாதன்




சிந்தனைப்பூக்கள் பத்மநாதன் என்று தமிழ் இலக்கிய உலகில் அறியப்பட்ட உரையாளர், எழுத்தாளர் திரு. எஸ். பத்மநாதன் அவர்கள் இவ்வருடம் டிசெம்பர் மாதம் முத்து விழாக் கொண்டாடுகின்றார். இவர் இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணத்தில் உள்ள உரும்பிராய் என்ற ஊரில் பிறந்தார். ஆரம்ப கல்வியை உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்திலும், அதைத் தொடர்ந்து உரும்பிராய் இந்துக் கல்லூரி, ஸ்கந்தவரோதயா கல்லூரி, பேராதனை பல்கலைக் கழகம் ஆகியவற்றில் கல்வி கற்றார். பேராதனை பல்கலைக்கழகத்தில் புவியியல் சிறப்புப் பட்டமும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமா பட்டமும் பெற்றவர். கனடாவில் ரொறொன்ரோ வர்த்தகக் கல்லூரியில் 1993ஆம் ஆண்டு 'பிரயாணமும் உல்லாசப் பயணமும்' என்னும் துறையில் டிப்ளோமா பட்டம் பெற்றுள்ளார்.

இலங்கையின் மலையகத்தில் உள்ள பதுளை, நுவரெலியா, பண்டாரவளை மாவட்டங்களில் சமூகக்கல்வி பாடசேவைக் கால ஆலோசகராகவும், பாடவிதான அபிவிருத்தி சபையில் நூலாக்கக் குழுவிலும், ஒஸ்மானியா கல்லூரியில் ஆசிரியராகவும், கோப்பாய் அரசினர் பயிற்சிக் கல்லூரியில் சமூகக் கல்வி விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அறிவியல் அரங்கக் குழுவுடன் இணைந்து நிகழ்ச்சியை நடத்தியுள்ளார். இலங்கையில் இருந்து வெளிவரும் மல்லிகை, வீரகேசரி, தினபதி, ஈழநாடு, தினக்குரல் ஆகிய ஊடகங்களில் கல்வி, புவியியல் சம்பந்தமான கட்டுரைகள் எழுதியுள்ளார்.

1983ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனவழிப்பு நடவடிக்கை காரணமாகத் தனது குடும்பத்தின் பாதுகாப்புக் கருதி, 1985ஆம் ஆண்டு கனடா நாட்டிற்குப் புலம் பெயர்ந்தார். கனடாவின் மொன்றியலில் தமிழர் ஒளி அமைப்பின் ஒருங்கிணைப்பாளராகவும் இருந்த இவர், இளங்கீற்று, தமிழ் ஒளி சஞ்சிகைகளில் இலக்கியப் பங்களிப்பும் செய்தார். சிறந்ததொரு உரையாளர் என்பதால், வான்தென்றல் வானொலியில் நிகழ்சிகளையும் செய்துள்ளார். ரொறொன்ரோவில் ரேடியோ ஏசியா, கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கீதவாணி வானொலி, கனடியத் தமிழ் வானொலி போன்றவற்றில் நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கின்றார். தமிழருவி, நம்நாடு, ஈழநாடு, தமிழோசை, சுதந்திரன், முழக்கம், தமிழர் செந்தாமரை, தாய்வீடு, விளம்பரம், உதயன், மொன்சூன் ஜெர்னல் போன்ற பத்திரிகைகளிலும், தமிழர் தகவல், தூறல், தளிர் ஆகிய சஞ்சிகைகளிலும் பல்துறை ஆக்கங்களை வெளியிட்டுள்ளார். இவர் பத்திரிகைகளிலும், இதழ்களிலும் அவ்வப்போது எழுதிய தனது கட்டுரைகளைச் 'சிந்தனைப்பூக்கள்' என்ற பெயரில் 5 பாகங்களாகத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.




ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக எழுத்துத் துறையில் ஈடுபட்டுள்ள இவர், உளவியல் மருத்துவத்துறையில் பல பெறுமதி வாய்ந்த கட்டுரைகளை எழுதி வருகின்றார். 2016ஆம் ஆண்டு லண்டன் பத்திரிகை நடத்திய சர்வதேச கட்டுரைப் போட்டியிலும் முதலிடம் பெற்றுள்ளார். ஒன்ராறியோவில் தொண்டர் சேவைக்கான பல விருதுகளையும், 2000ஆம் ஆண்டு தமிழர் தகவலின் இலக்கிய சேவை விருதையும், 2022ஆம் ஆண்டு கனடா உதயன் பத்திரிகையின் தமிழ் இலக்கிய மேன்மை விருதையும் பெற்றவர்.

15 வருடங்களுக்கான ஒன்ராறியோ தொண்டர் விருது, இலங்கை சமூக முன்னேற்றக்கழக சமாசத்தின் 'வித்யாஜோதி' விருது, தூறல் சஞ்சிகையின் வாழ்நாள் சாதனையாளர் விருது, கனடா எழுத்தாளர் இணையத்தின் இலக்கிய விருது, தமிழர் சேவை நிறுவனத்தின் 'பொன்மனச் செல்வர்' விருது, சர்வதேச தமிழ் கலாச்சார விருது - ஒன்ராறியோ போன்ற விருதுகளைப் பெற்ற இவர், கௌரவ டோலி பேகம், ஸ்காபரோ தென்மேற்கு மாகாண ஆட்சிமன்ற உறுப்பினரால் 'தமிழ் இலக்கிய, சமூகசேவை விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் காப்பாளராக இருக்கும் திரு. எஸ். பத்மநாதன் அவர்களுக்கு கனடா தமிழ் எழுத்தாளர் இணையம், 'ஒருவரை வாழும் போதே கௌரவிக்கும்' சிறந்த நோக்கத்தோடு, இவ்வருடம் 28-10-2023ஆம் ஆண்டு வாழ்நாள் சாதனையாளர் விருது கொடுத்துக் கௌரவம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. திரு. எஸ். பத்தமநாதன் தம்பதியினர் நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழவேண்டும் என்றும், தமிழ் இலக்கியத்திற்கு அவர் மேலும் சிறப்பான பங்களிப்பு ஆற்ற வேண்டும் என்றும், கனடிய இலக்கிய ஆர்வலர்கள் சார்பாகவும் விளம்பரம் பத்திரிகை சார்பாகவும் வாழ்த்துகின்றோம். வாழ்க நீடூழி!


# கனடாவின்...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

கற்றுக்கொண்டான்.

## வாழ்க்கைக்குக் கல்வி

மனித நாகரிக வளர்ச்சிக்கு வித்திட்ட சாதனமாக மனிதனது சிந்தனை ஆற்றல் வெளிப்பட்டது. தான் பட்ட அனுபவங் களைத் தனது பிள்ளைகளுக்குக் கடத்துவதே ஆதிமனிதனின் ஆரம்ப நிலைக் கல்வியாகக் காணப்பட்டுள்ளது. வேட்டையாடச் செல்லும்போது திசை பற்றிய அறிவு அவனுக்குப் பயன்பட்டது. தனது இருப்பிடத்திற்குத் திரும்பிவருவ தற்கு திசைபற்றிய அறிவு அவனுக்கு உதவியது. தான் பாவித்த பொருட்களை அல்லது கண்டவற்றைக் கீறி அவற்றை



மற்றவர்களுக்குக் காட்டி அதன் விளக்கத்தை தரும் ஓர் ஊடகமாக வரைதல் பயன்பட்டது. படங்களை வாசிக்கக் கற்றுக்கொள்ளுதல் எழுத்தறி வற்ற சமுதாயத்தில் முக்கிமானதாக வாழ்வியலோடு பின்னிப்பிணைந்ததாக அமைந்துள்ளது. விலங்குகளை வேட்டை யாட முன்பின் தெரியாத காட்டிற்குச் சென்ற அவன் தனது இருப்பிடத்திற்கு வருவதற்குப் பயன்படுத்திய வழி திசை பற்றிய அறிவும், வழித்தடமுமே ஆகும். விலங்குகளை வேட்டையாடவும் விலங்கு களின் பாதச் சுவடுகளைப் பின்பற்றிச் செல்லவும் கற்றுக்கொண்டமை அவன் படங்களை வாசிக்கும் அறிவைப் பெற்றமையே எனலாம். விலங்களின் பாதச்சுவட்டைப் பார்த்து அது என்ன விலங்கு என்பதனை அறிவதற்கு படம் வாசிக்கும் அறிவை அவன் பெற்றுக் கொண்டதே காரணமாகும்.

அவதானித்தல், வாசித்தல் என்பன கல்வியின் ஏணிப்படிகளாகக் காணப்பட் டன. ஒலியின் வேறுபாடுகளை பிரித்து அறிந்துகொள்ளவும், படங்களைப் பார்த்து வேறுபாடுகளைக் கற்றுக்கொள்ளவும் அவனது பெற்றோரிடமிருந்து கற்றுக் கொண்ட அறிவு உதவியுள்ளது. படங் களை கற்பாறைகளிலும், குகைகளிலும் கீறி அவன் எழுதவும் கற்றிருக்கின்றான். நாடோடியாக வாழ்ந்த இனக்குழுக்கள் நதிக்கரையோரங்கள், நீர் நிலைகளுக்கு அயலாக நிரந்தரமாக வாழத் தலை பட்டமை அவனது வாழ்வியலில் மாற்றங் களை ஏற்படுத்தியது. பயிர்கொடிகள், காய், கனிகளைத் தனது உணவாக உற்பத்தி செய்யும் முறைகளையும் கற்றுக் கொண்டதோடு, விலங்குவேட்டை, மீன் பிடி என்பனவற்றில் நுட்பங்கள் பற்றிய அறிவினையும் தனது இளந்தலை முறைக்குக் கடத்துவதாக கல்வி மேற்கொள்ளப்பட்டது.

இவ்வடிப்படையில் தான் கற்றுக்கொண்ட வற்றை தனது இளந்தலைமுறையின ருக்குக் கற்றுத்தரும் நிலையை உருவாக்கிக் கொண்டதாக ஆதிமனிதனின் கல்விமுறை வளர்ச்சி கண்டுவந்தது.

இவ்வித கல்விமுறையே ஆரம்ப காலமனிதனின் கலாசார வளர்ச்சியின் ஏணிப்படியாகக் காணப்பட்டது. ஆனால் இவை அவன் வாழ்ந்து இடம், சூழல் என்பவற்றிற்கேற்ப மாறுபட்டவையாக அமைந்திருந்தமையால் கலாசார, பண்பாட்டு வாழ்வியல் முறைகளிலும் மாற்றங்கள் காணப்பட்டன. இதனால் கல்விமுறைகள் கிரேக்க, ரோம, இந்திய நாகரிக வளர்ச்சிக்கு கல்வி விருத்தியே காரணமாகும்.

விசேட இலக்குகளில் பிள்ளைகளை மிக நுட்பமாகப் போதிக்கப்படவேண்டிய பங்கு பெற்றோருடையது. சிறப்பாக கதை சொல்லிகள் மற்றும் மதபோதகர்கள் போன்றோரின் கடமை கதை சொல்வதன் மூலம் அவர்களின் அறிவை விருத்தி செய்வதோடு இறை நம்பிக்கையைப் பரப்புவதும் சாத்தியமாயிற்று. இருளைக் கண்டு பயந்த மனிதன் தீயின் உதவியால் ஒளியை ஏற்படுத்தி நெருங்கியிருந்த பயத்தைப் போக்கிக்கொண்டான். குழு வுணர்வும் ஒன்றாக வாழும் முறையையும் பண்புகளையும் சில சடங்குகளின் அடிப் படையில் அவர்களிடம் எடுத்துரைப்பது முக்கியமானதாகக் காணப்பட்டது. இவற்றின் அடிப்படையிலே வாய்மொழி யாக கடத்தப்பட்ட கல்விமுறை பின்னர் படங்கள், கோடுகள் போன்ற எழுத்துப் பொறிமுறைகளுக்கும் மாற்றத்தைக் கொண்டதாக வளர்ந்து வந்துள்ளது.

## குழுக்கள்

பிரதேசங்களின் அடிப்படையில் மனித குலம் தனிமனிதனாக வாழாமல் குழுக்க ளாக வாழத்தலைப்பட்டமை இன்றைய சமூக அமைப்பிற்கு வித்திட்டது. பெரும் பாலான பழங்குடியின மக்களிடையே பாரம்பரியக் கல்வியானது கவனிப்பு மற்றும் நடத்தை, குடும்பம் மற்றும் சமூக மயமாக்கல், வாய்வழி போதனைகள் மற்றும் சமூக விழாக்கள் மற்றும் நிறுவனங்களில் பங்கேற்பது உள்ளிட்ட பல நுட்பங்களைப் பயன்படுத்தி நிறைவேற்றப்பட்டது. இளைஞர்களுக்கு கல்வி கற்பிக்கும் பொறுப்பில் உள்ள பெரியவர்களில் பெற்றோர், தாத்தா, பாட்டி, பெரிய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சமூக பெரியவர்கள் உள்ளனர். எடுத்துக்காட்டாக, இன்யூட் சமூகங்களில், சிறுவர்கள் தங்கள் குடும்பங்களின் மூத்த உறுப்பினர்களிடமிருந்து நிலத்தில் பயிற்சி பெற்றனர். இனுக் பெண்கள் தங்கள் குடும்பத்தில் உள்ள மூத்த பெண்களின் காலடியில் இருந்து ஆடைகள் வெட்டுதல் மற்றும் தையல், உணவு தயாரித்தல் மற்றும் குழந்தை வளர்ப்பு போன்ற வீட்டுத் திறன்களை கற்றுக்கொண்டனர். உலக நாடுகளில் பெரும்பாலான பிற பழங்குடி இனத்தவர்களும் இதேபோன்ற கற்பித்தல் நுட்பங்களைக் கொண்டிருந்தன.

கனடாவில் வாழ்ந்த பழங்குடியினர் தீயைப் புனிதமானதாகவும், அவற்றில் இருந்து மேலெழுந்து செல்லும் புகையை இறைவனை அடையும் ஊடகமாகவும் கற்பனை செய்தனர். இதனால் 'தீ' அவர்களின் முக்கியமான தொன்றாக மாறியது. தீ தமக்குப் பாதுகாப்புத் தரவல்லது என எண்ணத் தலைப்பட்டான்.

சமூக அமைப்பும் அளவும் உத்தரவாத மளிக்கும் இடத்தில், குழுவின் சடங்கு அமைப்புகள் மற்றும் சங்கங்களின் உறுப்பினர்களால் இளைஞர்களும் கல்வி கற்றனர். இத்தகைய சமூகங்களுக்கு தீ காவலர்கள் (வியர்வை லாட்ஜ்கள் மற்றும் பிற ஆன்மீக மற்றும் கலாச்சார மையங் களில் புனிதமான தீயை பாதுகாத்து பராமரிக்கும் பொறுப்பில் உள்ளவர்கள்) மற்றும் வரலாறுகள் மற்றும் மத மரபு களை கடந்து செல்வது போன்ற சிறப்பு கடமைகள் இருந்தன. ஹைடா மற்றும் நூ-சா-நுல்த் போன்ற சமூக மற்றும் பொருளாதார ரீதியிலான வடமேற்குக் கடலோரப் பண்பாடுகள், சிறப்புக் கைவினைஞர் மற்றும் சடங்குப் பாத்திரங்களை உள்ளடக்கியது, அதன் தொடர்ச்சியானது பொருத்தமான திறன் களையும் அறிவையும் கற்றுக் கொள்வதற் கான பயிற்சியாளர்களைச் சார்ந்தது. மருந்துகள், சடங்குகள் மற்றும் வாய்வழி வரலாறுகள் ஆகியவற்றிற்கான அறிவைப் பெறுவதற்கு குறைவான அடுக்குமுறை கொண்ட பழங்குடியின மக்கள் பயிற்சி யாளர்களின் பயிற்சியை நம்பியிருந்தனர்.

இந்த முறைகள் மூலம், குழந்தைகள் வயதுவந்த வாழ்க்கைக்கு தேவையான மதிப்புகள், நம்பிக்கைகள், திறன்கள் மற்றும் அறிவு ஆகியவற்றைக் கற்றுக் கொண்டனர். இந்த நுட்பங்கள் இன்றும் தொடர்கின்றன, ஆனால் பல பழங்குடி மக்களுக்கு அவற்றின் முக்கியத்துவம் 350 ஆண்டுகளாக முறையான, ஐரோப்பிய வகுப்பறை _ வடிவமான கல்வியின் மூலம் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

# நானிலம்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

தலைவன் என்னுடன் கூடியிருந்தால் என்னுடைய மாந்தளிர் போன்ற, அழகிய நிறம் வீணாகாது. பசுவின் பால் கன்றுக்கும் பயன்பட்டுக் கலத்திலும் நிரம்புவது போல் என் அழகு எனக்கும் பயன்படும் என் தலைவனுக்கும் இன்பம் தரும்."

நட்பின் பெருமை பற்றிக் குறுந் தொகையில் வரும் பாடல் சிலவற்றையும் கடந்த இதழ்களில் உரையாடினோம். தலைவன், தலைவி ஆகியோரின் காதல் வாழ்க்கையில் தோழியின் பங்கு எவ்வளவு உயர்ந்ததாக உள்ளது என்பதை குறுந்தொகையில் உள்ள சில பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. நட்பின் பெருமை இவற்றால் நன்கு புலப்படுகிறது.

சங்க இலக்கியங்கள் மூலமாகவும் நட்பு பற்றிய கருத்துக்களை இத்தொடர் கட்டுரையில் தொடர்ந்து ஆராய்வோம்.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)

# கனடாவில்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

'பயங்கரவாதி' என்ற நாவல் 30-7-2023 ஆம் ஆண்டு ஸ்காபரோவில் அறிமுகம் செய்து வைக்கப்பெற்றது. ஆசி காந்தராஜாவின் 'அகதியின் பேர்ளின் வாசல்' என்ற நாவல் ஸ்காபரோவில் 29-07-2023ஆம் ஆண்டு வெளியிட்டு வைக்கப்பெற்றது.

எழுத்தாளர் குரு அரவிந்தன் வாசகர் வட்டத்தின் ஆதரவில் 'அம்மாவின் பிள்ளைகள்' (நாவல்), 'ஆறாம் நிலத்திணை' (கட்டுரை), 'சதிவிரதன்' (சிறு கதைத்தொகுப்பு) ஆகிய நூல்களின் அறிமுக விழாவும், இனிய நந்தவன பிரசுரத்தின் வெளிநாட்டுக் கதைத்தொகுப் பான 'சாக்லட் பெண்ணும் பண்ணை வீடும்' என்ற சிறுகதைத் தொகுப்பும், எழுத்தாளர் மாலினி அரவிந்தனின் 'பறவைகள்' என்ற சிறுகதைத் தொகுப்பும் மிசிசாக்காவில் 22-07-2023ஆம் ஆண்டு வெளியிட்டு வைக்கப் பெற்றது.

தமிழர் தகவல் ஆண்டுமலர் ரொறன்ரோ வில் வெளியிட்டு வைக்கப் பெற்றது. எழுத்தாளர் க. நவம் எழுதிய 'எனினும் நான் எழுகின்றேன்' என்ற கவிதை நூல் ஸ்காபரோவில் 24-06-2023 ஆண்டு வெளி யிட்டு வைக்கப்பெற்றது. காலம் செல்வத்தின் 'பனிவிழும் பனைவனம்' என்ற நூல் ஸ்காபரோவில் வெளியிட்டு வைக்கப்பெற்றது. விஜயராணி மதியழக னின் 'அழியாப்புகழ்' என்ற கவிதைத் தொகுப்பு மென்றியலில் வெளியிட்டு வைக்கப்பெற்றது. புலவர் மயில் வாகனனின் 'குறட்கவியமுதம்' என்ற கவிதைத் தொகுப்பு ஸ்காபரோவில் வெளியிடப் பெற்றது. செ. அன்புராசா அடிகள் எழுதிய 'அன்புள்ள ஆரியசிங்க' என்ற நூல் ஸ்காபரோவில் 16-06-2023ஆம் ஆண்டு அறிமுகம் செய்து வைக்கப் பெற்றது.

## BASEMENT FOR RENT

**MARKHAM & BUR OAK**
3 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to mount joy go station. Avail. January 01, 2024.
தொடர்புகளுக்கு: **905.350.5005**

**WHITES ROAD & TAUNTON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. Laundry, 1 parking & brand new kitchen. Close to all facilities. Avail. immediately.
**416.893.5342 /416.999.8998**

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to access the bus, schools & all facilities. Avail. February 01, 2024.
**647.530.2816 / 905.472.5654**

**MIDLAND & EGLINTON**
2 bedroom basement for rent. Near Elementary school, TTC, subway & tamil supermarket. Sep. entrance & parking. Avail. immediately.
**647.909.3765/416.755.8397**

**MORNINGSIDE & FINCH**
2 Bedrooms bsmt for rent. 2 Washrooms, laundry & 2 parking. Couple/students/family preferred. Close to TTC, Eraa supermarket & all facilities. Avail. immediately.
**647.781.4266 / 647.914.7245**

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt with spacious living room for rent. Full bathroom, sep. entrance & 1 parking. Available February 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.625.6733**

**MORNINGSIDE & SEASON DRIVE**
1 bedroom basement for rent. Washroom, Kitchen & parking. Female preferred. Avail. immediately. தொடர்புகளுக்கு:
**647.532.9378/416.244.4580**

**MARKHAM & STEELES**
1 bedroom bsmt for rent. Sep. entrance, rent includes utilities, 1 car parking & laundry. Close to TTC, mall & school. Avail. immediately.
**Call Rajah: 416.917.0557**

**SALEM & ROSSLAND (Ajax)**
2 bedrooms bsmt for rent. Sep. entrance, Sep. laundry. Close to Amazon Fulfillment Center, HWY 401/412/407 & Stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.473.3052**

33 ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059 www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca www.tamilvanakkam.com

## BASEMENT FOR RENT

**NEILSON& MORNINGSIDE**
1 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.502.9432**

**TAUNTON & BURKHOLDER**
2 bedroom bsmt for rent. Sep. entrance & parking. Close to bus & all facilities. Avail. immediately.
**416.299.3529/647.808.3529**

**PHARMACY & ELLESMERE**
2 Bedrooms bsmt for rent. 1 washroom, shared Laundry & 2 parking. Rent $1950 + Utilities 30%. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.588.2228**

**MORNINGSIDE & SHEPPARD**
2 bedrooms basement for rent. Sep. entrance, Kitchen, washroom, Laundry & 1 Parking. Close to all facilities. Avail. immediately.
**647.906.9431/647.990.3879**

**MORNINGSIDE & SHEPPARD**
1 bedroom bsmt for rent. Sep. entrance, Sep.laundry & parking. Close to TTC, HWY 401, & Stores Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.473.3052**

**NEILSON ROAD & FINCH AVE. E.**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, utilities. No smoking. Single person preferred. Avail. immediately
தொடர்புகளுக்கு: **416.835.0273**

**16th AVENUE & BUR OAK**
1 big bedroom, Full washroom new bsmt for rent. Sep.entrance, Kitchen, parking, Couple/Single preferred. No smoke, No pets. Avail. January 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.258.7482**

**HOOVER PARK DR. & 10TH LANE STOUFFVILLE**
1 bedroom bsmt Apt. for rent. Sep. entrance, parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.830.0472**

## BASEMENT FOR RENT

**MARKHAM & LAWRENCE**
3 bedrooms bsmt for rent. Sep. entrance, 2 full washroom, parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416. 271.5420**

**MARKHAM & DENISON**
3 bedrooms brand new bsmt for rent. Sep. entrance, parking & laundry. Avail. immediately.
**437.995.8245/647.202.8933**

**Highway 7 & 9th line, Markham**
2 bedroom bsmt apt. for rent. Sep. entrance. Female students /couple professionals preferred. No pets.
தொடர்புகளுக்கு: **647.636.9089**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. January 01, 2024. தொடர்புகளுக்கு:
**647.741.5335 / 647.779.5332**

**KENNEDY & EGLINTON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
**647.869.3509 / 416.271.2377**

**BIRCHMOUNT & ELLESMERE**
2 Bedrooms bsmt for rent. Couple / students preferred. Avail. immediately. Close to all facilities.
**416.492.6817 /647.673.3665**

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, Parking & Sep. laundry. Close to TTC & Eraa Supermarket. Avail. January 01, 2024.
**416.292.5871/647.868.5871**

**MORNINGSIDE & OLD FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.855.6482**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BASEMENT FOR RENT

**BRIMLEY & DENISON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.843.0011**

**MIDDLEFIELD & FINCH**
1 bedroom bsmt for rent. Near GTA mall. Ladies preferred. No smoking & no pets. Avail. Immediately.
**647.712.5440 / 647.929.3784**

## ROOM FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
1 Room in a basement for rent. Sep. entrance, laundry & parking. Also 1 room for rent in main floor. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.531.2495**

**FINCH & NEILSON**
1 bedroom for rent. Female preferred. Wifi included. Close to Eraa supermarket & all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **647.710.1971**

**9TH LINE & 14TH AVENUE**
Room for rent. Parking, laundry & internet. Close to YRT & all other facilities.
**416.648.1987 / 416.669.3549**

**WARDEN & LAWRENCE**
1 Bedroom/ 2 Bedrooms available with living room, washroom & Kitchen. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.708.3444**

**WARDEN & FINCH**
1 Bedroom for rent in a condo. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.667.0482**

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom for rent. Shared washroom, kitchen & laundry. Close to access the bus & all other facilities. Female student preferred. Avail. January 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.580.9424**

**KENNEDY & EGLINTON**
2 Bedrooms in a 3 bedrooms bsmt for rent. Sep. entrance, shared kitchen & shared washroom. Male preferred. Close to Kennedy subway. Avail. Jan. 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.938.8525**

மேலும் பக்கங்கள் 13,14, 15

## ROOM FOR RENT

**WARDEN & FINCH**
2 Bedrooms for rent in a Condo. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416. 271.5420**

**MORNINGSIDE & STAINES**
2 Bedrooms for rent. Shared kitchen, laundry & parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.330.4327**

**MCLEVIN AVE. & FINCH**
2 Bedrooms for rent. Laundry, Cable, internet, Utilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.414.6909**

**MIDLAND & STEELES**
**Steeles Road**இல் அமைந்துள்ள வீடொன்றில் அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. 24 hours பஸ் சேவை, நடை தூரத்தில் தமிழ் கடை, No Frills, Banks, etc.
தொடர்புகளுக்கு: **416.894.9309**

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom for rent in a condo. Shared kitchen, laundry, internet & Sep. washroom. Female only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.988.4508**

**MORNINGSIDE & SHEPPARD**
1 bedroom for rent. Avail. immediately.
**MARKHAM & DENISON**
1 bedroom for rent. Avail. January 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.666.6403**

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom for rent. Parking, Share 1 or 2 person. Avail. January 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.275.7764**

**MCCOWAN / MCNICOLL**
**1 Room for rent in a house. Only Seniors / ladies.** Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647 823 3667**

## BASEMENT FOR RENT

**ROSSLAND & BROCK ST.**
3 bedroom bsmt for rent . Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.303.7005**

மேலும் பக்கங்கள் 12,14,15

## BASEMENT FOR RENT

**MCCOWAN & HIGHGLEN**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking. Close to bus, schools & HWY 407. Avail. January 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.540.1475**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & SHEPPARD**
2 bedrooms bsmt for rent . Sep. entrance, sep. laundry & parking. No smoke & no pets. Close to scarborough center. Avail. January 01, 2024.
**905.789.6979/ 647.203.4692**

## BASEMENT FOR RENT

**BIRCHMOUNT & ELLESMERE**
1-bedroom bsmt apt. fo rent. Sep. entrance. Laundry. Close to HWY 401, facilities, Steps from TTC. Avail immediately.
**647.274.3203** (call or text)

## BASEMENT FOR RENT

**MARKHAM & 14TH AVE.**
2 bedrooms bsmt for rent. Living room, Side entrance, Separate laundry. Avail. January 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.296.7932**

## BASEMENTS FOR RENT

**MEADOWVALE & ELLESMERE**
1.5 Bedroom, Sep. entrance, parking & laundry. Couple or small family preferred.
**BARRIE** - 1 Bedroom, Sep. entrance, Parking & laundry. No pets/no smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.770.8482**

## BASEMENT FOR RENT

**9th LINE & 14th AVENUE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking and laundry. Close all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.406.7273**

## BASEMENT FOR RENT

**MARKHAM & BRIMORTON**
2 large rooms, 2 washrooms with lots of natural light. Sep. entrance. Bright kitchen, potlights.1 parking. Bills incl. Close to all amenities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.887.5478**

## BASEMENT FOR RENT

**MARKHAM & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. No smoke & no pets. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.829.3730**

## BASEMENT FOR RENT

**AJAX & PICKERING**
3 bedrooms newly renovated legal bsmt for rent. 2 full washroom, Sep. entrance, parking & Sep. laundry. Close to HWY 401 & school. Avail. immediately.
**647.896.1239/647.769.1239**

## BASEMENT FOR RENT

**MEADOWVALE & ELLESMERE**
Side split 3 for rent. 4 Rooms, 2 Washrooms. Sep. Washer & Dryer (basement). Close to all facilities
தொடர்புகளுக்கு: **416.871.2475**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SEWELLS**
1 bedroom basement for Rent. Sep. entrance, 1 Bathroom, Kitchen, Shared washer dryer. Avail. immediately
தொடர்புகளுக்கு: **289.923.1455**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
1 bedroom bsmt for rent. Sep. entrance & laundry. Close to 10 min. away from TTC. Preferred for couple. No smoke & no pets. Working people are ok. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.917.7320**

## BASEMENT FOR RENT

**OLD FINCH & MORNINGSIDE**
3 bedrooms basement for rent. 2 washrooms, Sep. entrance, 1 Parking. Close to all facilities. Avail. January 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.760.3620**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES (STAINES)**
1 bedroom with living room bsmt for rent. Sep.entrance, laundry & Parking. Close to bus stop. Couple or small family preferred. No smoking & No pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.894.3333**

## BASEMENT FOR RENT

**VICTORIA PARK & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, living room, kitchen & Laundry. Close to TTC & parkway mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.420.9394**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Couple, Students or small family preferred. No smoke, no pets. Close to all facilities. Avail. January 01, 2024.
**647.569.0376/647.228.6841**

## BASEMENT FOR RENT

**BAYVIEW & MULOCK**
1 bedroom Bsmt for rent in near South Lake hospital. Sep. entrance, parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **289.231.6620**

## BASEMENT FOR RENT

**14TH AVE. & 9TH LANE**
3 bedrooms Brand new bsmt for rent. 2 washroom, Sep.entrance, 3 parking & laundry. Close to school. Avail. January 01, 2024.
**416.258.8253/416.824.9667**

## ROOM FOR RENT

**KENNEDY & CASTLEMORE**
மார்க்கம் பேஸ்மெண்ட் அறை வாடகைக்கு உண்டு. Rent $650. 2 அறை கொண்ட Unit முழுவதும் $1250. Furnished kitchen, washroom, shared laundry with one Parking. மகளிர் மட்டும்.
தொடர்புகளுக்கு: **416.994.9411**

## ROOM FOR RENT

**KIPLING & REXDALE**
1 bedroom for rent in a basement. Sep. entrance, rent includes utilities & high internet. Parking & laundry. Close to TTC. No pets/no smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.407.1778**

## ROOM FOR RENT

**MIDLAND & STEELES**
1 bedroom for rent. Attached washroom.
தொடர்புகளுக்கு: **416.908.6810**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR Full House, Condo, Basement & Business Units**

**647-861-8240**

## HOUSE FOR RENT

**WHITES ROAD & TAUNTON**

4 bedroom luxury new house for rent. 2.5 Washroom & 2 parking. Family or female students preferred. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.668.8187**

## HOUSE FOR RENT

**SCAR. GOLF CLUB & LAWRENCE**

2 Bedrooms house for rent. Laundry & parking. Close to all amenities.

தொடர்புகளுக்கு: **416.454.9986**

## HOME CARE (வீட்டுப் பராமரிப்பு)

**PERSONAL SUPPORT WORKERS** சேவை வழங்கப்படும்.

**647.701.9809**
**437.782.8776**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & MILITARY TRAIL**

**2 Furnished bedrooms for rent in a house. Shared kitchen & washroom. Avail. immediately. Working girls / students preferred. Close to all facilities.**

**647.822.8903/416.456.7813**

## HOUSE FOR RENT

**MARKHAM & ELLESMERE**

**3 bedrooms & 1 full washroom bungalow house main floor for rent. Bus 5 minutes walking distance, school, bank, mall, HWY 401 & other facilities. Avail. February 01, 2024.**

தொடர்புகளுக்கு: **647.996.6977**

## HOUSE FOR RENT

**16th AVENUE & CORNELL CENTER BLVD.**

3 Bedrooms house for rent. 2 washrooms & parking. Close to HWY 407, Go Station & all other facilities. Avail. January 01, 2024.

தொடர்புகளுக்கு: **647.862.7056**

## வேலைக்கு ஆள் தேவை

சிகை அலங்கார நிலையம் ஒன்றிற்கு தொழில் அனுபவமுள்ள வேலையாள் தேவை. (Barber)

தொடர்புகளுக்கு: **416.880.4829**

## ROOM FOR RENT

**BELLAMY & ELLESMERE**

Renovated 3 bedrooms in a 4 Bedrooms Basement. Sep.entrance, No parking, girls preferred. No visiters, No smoke, no pets. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.728.7261**

## HOUSE/BASEMENT FOR RENT

**TAPSCOTT & CROWTRAIL**

1 Bedroom basement for rent.

STAINES & MORNINGSIDE

2 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.

**Contact: 647.686.8590**

## HOME RENOVATION

வேலையாட்கள் தேவை

**Basement, Kitchen, Painting, Tiles, Washroom, Flooring**

போன்ற வீட்டு வேலைகள் செய்வதற்கு தகுதியான வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு: **647.992.7694**

## Van for Sale

**16 ft GMC cube van for sale. Good condition. 2007 model. Reasonable price. Located in Scarborough. for more details Pl. Call – 647.832.6899**

## HOUSE FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**

2 bedrooms, 1 washroom Two-story Town house for rent. Private terrace, parking & Sep. laundry. Close to all major super markets,HWY 401& all amenities, one minute walk to TTC.

Available immediately.

**416.832.0982 / 647.785.3046**

## HOUSE FOR RENT

**SALEM & BAYLY**

3 Bedroom semi detached house for rent. Close to hwy 401 & all other facilities. For Dec. 2023 - May 2024 (6 Month only) Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.420.1309**

## TUTORING SERVICES

**AJAX & STOFVILLE**

Online / In Person

JK - Grade 10

(Professional tutor who has been in the business for over 15 years.)

தொடர்புகளுக்கு: **416.917.0590**

## மணமகன் தேவை

**1996**இல் **Toronto**வில் பிறந்த **CPA Accountant**ஆகப் பணிபுரியும் மணமகளுக்கு தகுதியான மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். சூரியனும் செவ்வாயும் சேர்ந்துள்ள சாதகமுடையவர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: **416.995.3830**

## BASEMENT / HOUSE FOR RENT

**McCOWAN & ALTON TOWERES CIRCLE**

2 bedrooms Basement for rent. Avail. immediately.

**KENNEDY & HWY 401** – 2 bedrooms condo. for rent. 1 Parking, Avail. immediately. Rent $3,200+utilities.

தொடர்புகளுக்கு: **416.836.0010**

## மணமகன் தேவை

கனடாவில் வாழும் 38 வயதான **(Graduated in Medical office Administration)** பெண்ணுக்கு மணமாகாத 38 - 42 வயதுள்ள மணமகனைத் தேடுகிறோம்.

**416.551.9737/ 647.937.1243**

## மணமகன் தேவை

கனடாவில் கல்வி கற்று மருத்துவராகப் பணிபுரியும் மணமகளுக்குப் பொருத்தமான வரனை எதிர்பார்க்கிறோம். தொடர்பு கொள்ளவும்.

**647.809.7148**

## ROOM FOR RENT

**MARKHAM & DENISON**

1 large bedroom with sep. washroom for rent. 2 or 3 people can share. Male preferred. $1500 per month including utilities. No kitchen available. Also another room for rent. Rent $700. No alcohol, no smoking & no pets. Close to all the facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.507.2148 / 647.864.1051**

## CONDO. & HOUSE FOR RENT

**MARKHAM & ELLESMERE** – 3 bedrooms Condo for Rent. 2 washroom, 1 parking. Avail. immediately.

**OSHAWA** - 4 bedrooms detached House for Rent. 2 washrooms, 3 parking. Close to University & other facilities. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.

**PETERBOROUGH** - 4 bedrooms detached House for Rent. 2 washrooms, 3 parking, Avail. immediately. தொடர்புகளுக்கு: **647.702.2159**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & SEWLLES**

**Multiple bedrooms available with bathroom & kitchen.**

தனித்தனி அறைகளாகவும் கொடுக்கப்படும்.

**Close to TTC (2 Buses). Contact owner about renting price.**

தொடர்புகளுக்கு: **416.908.9494**


## BENTON AUTO DETAILING

**BENTON CAR WASH**

**Winter package starting from $49 & 2nd time service 10% off.**

தொடர்புகளுக்கு: **416 768 1001**

**1080 TAPSCOTT ROAD**



# CONDO./HOUSE FOR RENT

## 1) Condo. for Rent in Downtown

Brand new beautiful 1 bedroom + Den with 1bathroom Suite in the newly-built community by Broccolini. Walkout to the balcony from living/ kitchen. High end modern steel appliances, stone countertops, tiles backsplash, track lighting, floor to ceiling windows, smart home control.

## 2) Condo. for Rent In Mississauga Near to Square one Mall

Eglinton & Hurontario 2 bedrooms with 1washroom. Around 1050 Square feet in a luxury park mansion condo. Indoor swimming pool, Tennis Court etc.

## 3) House for Rent – 9th lane & 14th Avenue in Markham


4 Bedrooms and 3 washrooms with a big kitchen, living room & car parking. Close to School, Bus stop, Hwy 407 & shopping stores. No pets, No smoking.
Available from 1st January 2024.

Pl. Contact: **416–918–9848 / 416–857–7603**

# NIRUTHAN NADARAJAH

*(Licenced Insurance Agent)*

## *Insurance Products & services offered*



**Insurance**

- Life Insurance
  - *Term*
  - *Whole Life*
  - *Universal Life*
- Accident & Sickness Insurance
  - *Medical*
  - *Disability*
  - *Critical Illness*
- Travel Insurance
  - *Visitors*
  - *Supper Visa*
  - *International Student*
- Group Insurance

**Investment**

- RESP
- RRSP
- TFSA
- Segregated Funds
- Annuity

## Part Time Job / பகுதி நேர வேலை வாய்ப்பு

நீங்களும் ஒரு பகுதி நேர அல்லது முழு நேர பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி முகவராக பணிபுரிந்து சிறந்ததொரு வருமானத்தை ஈட்ட முடியும்

மாதம் $5000 முதல் $10,000 வரையிலான வருமானத்தை இலகுவாக ஈட்ட முடியும்

**What we offer...**

- Free Information
- Free Advice
- Free guidance
- Free Coaching
- Free Training
- Low Start up cost

**What you Achieve...**

- Financial Literacy
- Financial Security
- Financial Freedom
- Own Your Future

Contact
Niruthan Nadarajah (NR)
647-534-1819
wecare@nrlifegroup.com

*Secure yourself and your loved ones*

*What you need is what we do*

# HOUSE FOR SALE

## SALEM & TAUNTON

4 Bedrooms House for Sale. 3 washrooms with living room in upstairs, Double garage, full finished walkout basement with side entrance. Deck & Big shed in back side. High school & Elementary school in walking distance.



தொடர்புகளுக்கு: **647.537.6008**

# RENOVATION

- **Plumbing**
- **Painting**
- **Electric**
- **Tiles**
- **Basement**
- **Hardwood**
- **Laminating**
- **Kitchen**
- **Landscaping**
- **Interlock**







ஆகிய வேலைகள் செய்து கொடுக்கப்படும். அழையுங்கள்

**Dinesh: 647.625.2239**

**drsharvin15@gmail.com**


# உண்மையே உயர்வு




இன்றைய சமுதாயத்தில் பொய் சொல்வது பொதுவாகிவிட்டது. பொய்யான வக்கிரம் உயர அதனுள் உண்மை நசுக்கப்படுகிறது. பொய் என்பது ஒருவர் தனது சொந்த மனநிலைக்கு ஏற்பப் பேசுவது. உண்மை (Truth) என்பது அரிதாகிவிட்டது. சமுதாய நலிவுக்கு உண்மை மெலிந்து செல்வதும் காரணமாகும். உண்மை, வாய்மை, மெய்மை இம்மூன்றும் ஒன்றுபோலத் தோன்றும் சொற்களாயினும் வேறுபாடு உண்டு. மனிதன் தவறின்றி வாழ உதவும் உள்ளத்தில் பொய்யின்றி ஒழுகுதல் உண்மை. உள்ளத்தில் உள்ள உண்மை மாறாமல் வாய்வழியாக சொல்லாகப் பேச்சு வெளிப்படுவது வாய்மை. "வாய்மை எனப்படுவது யாதுஎனின் யாதொன்றும் தீமை இலாத சொலல்" என்கிறது பொய்யாமொழி. வாய்மை மொழி மாறாமல் நடப்பது மெய்மை. அதாவது மெய்யால் (உடம்பால்) செயற்படுவது மெய்மை. உண்மை எனும் சொல் வாய்மை, நேர்மை போன்ற பல பொருள்களில் அறியப்பட்டு ஆளுப்பட்டு வருகிறது. உள்ளத்திலிருந்து வருவது உண்மை. வெறும் வாயிலிருந்து வருவது பொய். இப்படித்தான் இந்தப் பெயர்கள் வந்திருக்கக்கூடும்.

"உண்மை என்பது பொருள்களுக்கும், அறிவுக்கும் இடையே உள்ள ஒரு சமன்பாடு. அல்லது உண்மை என்பது பொருள்களுக்கும் அறிவுக்கும் ஒரு போதுமான பொருத்தப்பாட்டு நிலைமை ஆகும்" என தோமஸ் அக்வினால் அவரது அறிக்கையில் கூறியுள்ளார். உயர்ந்த சிந்தனை உடைய பேச்சு சூழ்நிலையில் எது ஒப்புக் கொள்ளக்கூடிய நிலையில் இருக்குமோ அதுவே உண்மை எனப்படும்.

எப்போது மனிதன் சத்தியத்தை மீறி செயற்பட ஆரம்பித்தானோ அப்போதே பொய் என்ற சொல் வந்திருக்க வேண்டும். உண்மை ஒன்றுதான். பொய்தான் பலவாறாக இருக்க முடியும். உள்ளது என்ற சொல் உண்மை என்ற பொருளை மட்டும் தரும். உண்மை கூறுதல் என்பது உள்ளது உள்ளவாறே (The principle of sincerely) என்ற பொருளில் வழங்கப் பெறுகிறது. உண்மை அழியாதது. என்றும் நிலைப்பது. எல்லோராலும் விரும்பப்படுவது. சத்தியத்தை உயிராகக் கருதி வாழ்ந்தவர் காந்தியடிகள். இவர் சத்தியத்தைத் தேடுவதிலும், சத்தியத்தைத் தமது வாழ்க்கையில் சோதிப்பதிலும் செலவழித்தவர். அதனால் இன்றும் போற்றப்படுகிறார். உண்மை கூறுதல் என்ற அடிப்படையில் உள்ளதை உள்ளவாறு கூறலாமா? கூறினால் மனித குலத்துக்கு நன்மை பயக்குமா? பலசந்தர்ப்பங்களில் உள்ளதை உள்ளவாறு கூறுவதால் நன்மை இல்லாமலும் போயுள்ளது. மாறாக எதிர் விளைவுகளையே உருவாக்கியும் உள்ளது. இதனால்த்தான் வள்ளுவர் வாய்மை என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். உள்ளதை உள்ளவாறு கூறுகின்றோம் என்று தொற்றுநோய் பரப்பும் கிருமிகளைப்போல் வதந்திகளைப் பரப்பும் மனிதர் கொடியவர்கள். ஒருவர் பிறிதொருவர்பற்றித் தகாதன சொன்னாலும் அதை அப்படியே மற்றவருக்கு சொல்லிக் கலகத்தை ஏற்படுத்தக் கூடாது. இதை சமுதாயத்தில் கூடுதலாகக் காணலாம். கலகத்தை வளர்ப்பது உண்மையன்று. நம் செவிக்கு வரும் செய்திகளில் உள்ள வாய்மையை தேறித் தெளிய வேண்டும். வாய்மையைக் கண்டுணராமல் கோபம் கொள்ளல், பகைத்தல் நல்லதல்ல. ஆனால் இவை நடந்தேறத் தவறுவதில்லை. எவ்வுயிர்க்கும் நல்லன தருவதே வாய்மை.



நமக்கும், பிறருக்கும் தீங்கில்லாத நலம் தரும் சொற்களையே பேசவேண்டும். "இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம் செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்" அதாவது உண்மையை உணர்ந்தோரின் வாய்ச்சொல் எந்த அளவுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்குமோ, அதேபோல் நல்ல இனிமையான வார்த்தைகள் மனதில் இன்பத்தையும், நெஞ்சில் ஈரத்தையும் கசிந்துருகச் செய்துவிடும் என்கிறது உலகப் பொதுமறை. இறைவனால் விலக்கப்பட்டதில் முக்கிய இடம் வகிப்பது பொய். சிலர் மற்றவர்களைச் சிரிக்க வைப்பதற்காகப் பொய் சொல்கின்றனர். இவர்களுக்கும் கேடு விளையும். உண்மை பேசுவது மனிதனை நன்மையின் பக்கம் இழுத்துச் செல்கிறது. நன்மை சொர்க்கத்தின் பக்கம் இழுத்துச் செல்கிறது. ஆனால் பொய் சொல்வது மனிதனை பாவங்களின் பக்கம் இழுத்துச் செல்கிறது. பாவங்களோ அவனை நரகத்தின் பக்கம் இழுத்துச் செல்கிறது. உண்மையின் பெருமையை உணர்ந்தோர் எதற்கெடுத்தாலும் பொய் பேசமாட்டார்கள். உண்மையைப் போன்ற தவம் இல்லை. பொய்யைப் போன்ற பாவம் இல்லை. "உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்" அதாவது, மனத்தூய்மையோடு நல்ல நெறியில் பொய்யே பேசாமல் நடந்தால் உலகத்தார் மனதாரப் பாராட்டுவர். "பொய்யாமை அன்ன புகழ்இல்லை எய்யாமை எல்லா அறமும் தரும்" வாய்மையோடும், தூய்மையோடும் வாழ்வதைப்போல புகழ் தருவது வேறில்லை. அதுவே எல்லா அறங்களையும் தரும் என்கிறது தெய்வநூல். உண்மையை பொய் ஒன்றும் செய்துவிட முடியாது. உண்மைக்கு வெற்றி கிடைத்தே தீரும். உண்மையே உயர்வு. உண்மை பேசுதல் உன்னதமானது. உண்மைதான் மனுக்குலத்தின் மகத்துவம். உண்மையின் தோல்விகள் பொய்யின் வெற்றிகளைத் தோற்கடிக்கும் என்பதில் ஐயமில்லை.

உண்மையாக இருக்கிறேன் என்று ஊமையாக இருந்துவிடக்கூடாது. மதிக்க மாட்டார்கள். மிதித்துவிடுவர். உண்மை என்பது நல்ல வார்த்தை. "எங்கே சென்றாலும் நல்ல வார்த்தைகளைப் பயன்படுத்தத் தெரிந்தவனே சிறந்த ஞானி" என்கிறார் அப்துல்கலாம். உண்மை பேசுவது சிக்கனமாகிவிட்டது. உண்மை பேசுவது சிறந்த ஒழுக்க விழுமியமாகும். ஒழுக்க விழுமியங்கள் அருகிச் செல்வதால் ஒழுக்கப் பிறழ்வுகள் சமூகத்தில் மலிந்துள்ளன. சிலபேர் போடும் போலி முகமூடிகளால் பல உண்மையான முகங்களைக்கூட நம்ப மறுக்கிறது மனது. உண்மை பேசும் மனிதர்க்கு எந்தவொரு உபதேசமும் தேவையில்லை. "உண்மைக்காக எதையும் துறக்கலாம். ஆனால் எதற்காகவும் உண்மையை துறக்காதே" என்கிறது விவேகானந்தர் பொன்மொழி. உண்மையை கடைப்பிடிப்பவன் 1000 யாகங்களைச் செய்வதால் கிடைப்பதைவிட கூடுதல் பலன் பெறுவான். பொய் பேசுவது ஜனரஞ்சகமாக இருக்கும். ஆனால் இறுதியில் கெடுதியை விளைவிக்கும். உண்மையைவிட உயர்ந்த தானம் இல்லை. உண்மையே சுவர்க்கத்தின் மாடிப்படிகள். உண்மை எனும் படகுகள் நல்லோரை கரைசேர்க்கும். உண்மைதான் பூமியை தாங்கிநிற்கிறது.

"யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும் வாய்மையின் நல பிற" அதாவது, நாம் உண்மையாகக் கண்டறிந்தவைகளில் உண்மை பேசுவதைவிட நல்ல காரியம் வேறு ஒன்றுமே இல்லை. எல்லாத் தத்துவங்களும் கூறுவது இதுவே என்கிறது புகழ் பெற்ற தமிழ்மொழி இலக்கியமாகும். எனவே உண்மையே உயர்வு என்பதை மனதில் நிறுத்தி வாழ்வோமாயின் வாழ்வு சிறக்கும்.




# தேடல் அனுபவம் தெளிதல்

எனது பன்னிரண்டு வயதளவில்
ஆத்தா - அம்மாவின் தாயார் -
சேடமிழுத்து இறந்துகொண்டு இருக்கும்
இறுதி நிலையில்
அம்மாவும் சகோதரங்களும்
ஆத்தாவைச் சூழ்ந்திருக்க
ஆத்தாவின் தலைமாட்டில் எரிந்து
கொண்டிருந்த சிறிய குத்துவிளக்கு
வெளிச்சத்துக்கு அருகே நான் இருந்து
தேவாரம் சிவபுராணம் திருவாசகம்
பக்கங்களைக் கண்ணீர் அழுகையுடன்
படித்துக் கொண்டு இருந்தேன்.

பதினான்கு வயதில் பத்தொன்பதே
வயதான இளந்தாரி
எனதருமை இளைய ஐயாவின்
-ஐயாவின் கடைசித் தம்பி-
இறந்த உடலை நான் காணாதபோதும்
வானத்தைப் பார்த்து நின்று கதறி
அழுதேன்.

என்னுடன் ஒரே வகுப்பில் ஐந்து
வருடங்கள் படித்தவன் ஊர்ச்சண்டையில்
இருபது வயதில் இறந்தபோது,
விம்மி அழுதேன், புரிதல் தெரியாமல்
காரணங்களை என்னுள் ஆய்வு
செய்தேன்.

நாற்பது வயதில் உயிர் நண்பன்
போர் விமானம் வீசியெறிந்த
குண்டடிபட்டு இறந்தபோது குளறி
ஒப்பாரி வரிகள் சொல்லி அழுத துயரம்
அழியாமல் இப்போதும்
நினைவின் இதயத்தில் வாழ்கின்றது.

உள்நாட்டுப் போரிலே சுனாமி
ஆழிப்பேரலையிலே குவியலாக
உறவுகள் மாண்ட நாட்களில்
ஞானிபோல் சிந்தித்தபோதும் அழுது
நின்ற மனதுக்கு



அணைபோட என்னால் முடியவில்லை.

உலக மக்கட்பெருக்கம் உயர்வடைகின்றது
மருத்துவ வளர்ச்சியின் திறனால்
முதியோர் வயதும் நீட்சி பெறுகின்றது.

காடு வெட்டப்பட்டு, கடல்
அசுத்தமடைந்து, காற்று மாசுபட்டு
உலக வெப்பம் அதிகரித்து, பூமி
நடுக்கம் கூடுகின்றது.

எந்த நிலையிலும் சின்ன மீன்களைப்
பெரிய மீன்கள் துரத்திப் பிடித்துச்
சாப்பிடுகின்றன, எரிகின்ற வீடுகளில்
பிடுங்கியது மிச்சம் எனும் படுபாடுகள்.

மரணம் என்பதன் யதார்த்தம் தேவைகள்
பற்றி அறுபது வயதைக் கடந்து மெல்ல
நகரும்போதுதான்
மூளை நரம்புக் கூட்டத்துடன் இப்போது
பேசிக்கொண்டு அலைகின்றது எனது
யாக்கை.

சேடம், சேடமிழுத்தல்: நெஞ்சுச் சளியில்
உயிர் நின்று ஊசலாடும் நிலை.
ஊசலாடல்: அங்கோ இங்கோ என்று
இருதலைப்பட்டு நிற்றல்.



முத்துராஜா

# இயற்கைதான் எனது அழகின் ரகசியம்!

## நேர்காணல்: ரஷ்மிகா மந்தனா

நேர்கண்டவர்: கண்ணன்

‘இங்கேம் இங்கேம் இங்கேம் காவலே’ என்ற ஒரே பாட்டின் மூலம் தென்னிந்திய சினிமா ரசிகர்களின் இதயங்களை கொள்ளையடித்தவர், நடிகை ரஷ்மிகா மந்தனா. தெலுங்கில் வெளியான இப் பாடலை அர்த்தம் புரியாவிட்டாலும் அப்போதே தமிழ் ரசிகர்களும் கொண்டாடி தீர்த்தனர். தொடர்ந்து, ‘டியர் காம்ரேட்’ என்ற மொழிமாற்ற படம் மூலமாக தமிழில் தலைகாட்டியவர். தற்போது தெலுங்கு, தமிழ், இந்தி மூன்று மொழிகளிலும் முன்னணி நடிகைகளுள் ஒருவர். சமீபத்தில் ‘டீப் பேக்’ என்ற செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன் படுத்தி ராஷ்மிகாவின் முகத்தைச் சேர்த்த காணொளி வெளியாகி வைரலானது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ராஷ்மிகா மந்தனாவை சந்தித்தோம். அவருடன் பேசியதிலிருந்து...

**உங்களைத் தொடர்ந்து கஜோல், கத்ரீனா கைஃப், ஆலியா பட், பிரியங்கா சோப்ரா என நடிகைகளின் போலி காணொளிகள் வெளியாகிக் கொண்டே இருக்கின்றன. உங்கள் காணொளி வெளியான போது எப்படி எதிர்கொண்டீர்கள்?**

இதைப் பகிர்வதில் மிகவும் வேதனையடைகிறேன். இணையத்தில் பரப்பப்படும் இத்தகைய போலியான ‘டீப் ஃபேக்’ (Deep Fake) காணொளிகளைப் பற்றி பேசியே ஆக வேண்டும். உண்மையில் இது எனக்கும் மற்ற நடிகைகளுக்கும் மட்டுமல்ல பெண்கள் ஒவ்வொருவருக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தலாக இருக்கிறது. நான் பள்ளியிலோ கல்லூரியிலோ படிக்கும்போது இதுபோல் எனக்கு நடந்திருந்தால், அதை நான் எப்படி எதிர் கொண்டிருப் பேன் என்பதைக் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. அந்த போலி காணொளி வெளியானபோது ஒரு பெண்ணாகவும் நடிகையாகவும் என்னுடன் எனக்குப் பாதுகாப்பாகவும் ஆதரவாகவும் என் குடும்பத்தினர், நண்பர்கள், நலம் விரும்பிகள், என் ரசிகர்கள் இருந்தனர். அவர்கள் அனைவருக்கும் நான் நன்றிக் கடன்பட்டுள்ளேன். இதுபோல் தொழில் நுட்பத்தைத் தவறாகப் பயன்படுத்தும் கும்பல்களை விரைவில் கண்டுபிடித்து, பொதுமக்களிடம் அவர்கள் யார் என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

**தொடர்ந்து பெரிய நடிகர்களின் படங்களில் நடிக்கிறீர்களே, இந்த வாய்ப்புகள் எப்படி அமைந்தன?**

பெரிய நடிகர்களின் படங்களில் நான் இருப்பதற்கு எந்தவித ரகசியமும் இல்லை. ஒரு படத்தில் நடிப்பதற்கு முன்பு அந்தப் படத்தின் கதையை கேட்பேன். இயக்குனரை நம்புவேன், அதற்குமேல் என் கையில் எதுவுமில்லை. தென்னிந்திய நடிகர்களுடன் நடிக்க வேண்டுமா அல்லது வடஇந்திய நடிகர்களுடன் நடிக்க வேண்டுமா என்பது இயக்குநரின் பார்வை. எனக்கு கதைதான் முக்கியம். இயக்குனரின் பார்வை என்ன என்பது



முக்கியம். நான் கூர்க்கில் இருந்து வந்த பெண். நான் நடிகை ஆவேன் என்று கூட நினைக்கவில்லை. எனக்கு இதுபோன்ற பெரிய நடிகர்களுடன் நடிப்பது பெருமை யான விஷயம். என்னை பொறுத்தவரை யில் எனக்கு கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்புகளுக்கும் நான் ஆசிர்வதிக்கப் பட்டவளாக நினைக்கிறேன்.

**உங்களுக்கும் தெலுங்கு நடிகர் விஜய் தேவர்கொண்டாவுக்கும் இடையேயான ‘கெமிஸ்ரி’ நன்றாக உள்ளதே. அந்த மந்திரம் எப்படி நிகழ்கிறது?**

இரண்டு நல்ல நபர்கள் சேர்ந்து பணி யாற்றும்போது அந்த மேஜிக் நடக்கிறது. அவருக்கு, நான் ஒரு நல்ல நடிகை என்றும் எனக்கு, அவர் ஒரு நல்ல நடிகர் என்றும் தெரியும். இரண்டு நல்ல நடிகர்கள் பாத்திரத்தின் உணர்ச்சிகளை சரியாக புரிந்துகொண்டு நடிக்கும்போது அந்த மேஜிக் நிகழ்கிறது. ஒருபோதும் விஜய் தேவர்கொண்டா கோபப்பட்டு நான் பார்த்ததேயில்லை. எனக்கே ஆச்சரியமாக இருக்கும். நான் அவரை அதிகமாக எரிச் சலூட்டினாலும் அமைதியாக இருப்பார்.

**நீங்கள் நடிக்க வந்த புதிதில் சாய் பல்லவிக்கு ரஷ்மிகா மந்தனா ஆபத்தாக உள்ளார் என்று இணையத்தில் பேசப் பட்டதே?**

ஆமாம், இப்போது அது அடங்கிவிட்டது. ஆனால், எப்படி அது உருவானதென்றே தெரியவில்லை. நான் சாய் பல்லவிக்குப் போட்டியா? சாய் பல்லவி எவ்வளவு உயரத்தில் இருக்கிறார்? எத்தகைய அற்புதமான படங்களில் நடித்துள்ளார். அவரது திறமை எல்லாருக்கும் தெரியும். நான் அவருக்குப் போட்டி என்று கூறுவ தெல்லாம், ரொம்ப அதிகம்.

**நீங்கள் நடித்த பல பாடல்கள் பிரபலம் அடைந்துள்ளன. ஆனால், ‘இங்கேம் இங்கேம்’ பாடல்தான் உங்களை முதலில் மிகப் பிரபலமாக்கியது. இதற்காக, எப்போ தாவது அப்பாடலை பாடிய சித் ஸ்ரீராமை அழைத்து நன்றி கூறியுள்ளீர்களா?**

அவருக்கு ‘மெசேஜ்’ அனுப்பினேன். மேலும் அவருடைய நிகழ்ச்சிகள் எங்கு நடந்தாலும் அதைப்பற்றி தெரிந்து கொள் வேன். நான் பல நபர்களோடு சேர்ந்து பணியாற்றுகிறேன். நான் அந்தளவிற்கு நன்றியுள்ளவளாக இருப்பேன் என்பது படத்தில் பணியாற்றிய அனைவருக்கும் தெரியும். மேலும், இது அனைவரும் கூட்டு சேர்ந்து உழைப்பது தானே.

**கவர்ச்சியான பாத்திரங்களில் நடிக்கிறீர் களே?**

தனிப்பட்ட அளவில் கவர்ச்சிக்காக மட்டும் பெண்களை பயன்படுத்துவது எனக்கு பிடிப்பதில்லை. படத்தில் பெண்களை ஒரு பொம்மையை போலவோ விலங்கு போலவோ நடத்துவது எனக்கு சுத்தமாக பிடிக்காது. ஆனால், அதை தவிர்க்க முடியாது. ‘கிரிக் பார்ட்டி’ தெலுங்கு படத்தில் கவர்ச்சியாக நடித்திருந்தேன். இதை பார்த்து அக்கம் பக்கத்து வீட்டினர் என்னை ஒரு மாதிரியாக பார்த்தனர். அது வெறும் நடிப்பு என்பதை அவர்களுக்கு புரியவைக்க முடியவில்லை. சில நண்பர் கள், தோழிகளும் நான் சினிமா வுக்கு வந்ததால் என்னுடன் நட்பை முறித்துக் கொண்டனர். இது எனக்கு அதிர்ச்சியாக வும் வேதனையாகவும் இருந்தது.

**உங்கள் மீதான விமர்சனங்களை எப்படி எடுத்துக் கொள்கிறீர்கள்?**

எனக்கு தெரியவில்லை. எனக்கு பலமும் இல்லை. யாராவது ஒருவர் எதையாவது கூறும்போது, எனக்கு கஷ்டமாக இருக்கிறது. ஆனால், அதற்கு எதிராக நான் என்ன செய்துவிட முடியும்? எனது வேலையை பத்து பேர் பாராட்டி, ஒருவர் மட்டும் குறை கூறினால், ஏன் அந்த ஒருவருக்கு மட்டும் பிடிக்கவில்லை என நான் யோசிக்க மாட்டேன். நான் எல்லாருக்கும் ஏற்றவள் அல்ல என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும். எனது மன உறுதியை ஒருபோதும் இழக்கவும் மாட்டேன், அதுபோல மக்கள் என்னை பாராட்டும் போது அதை என் தலையில் ஏற்றிக்கொள்ள மாட்டேன்.

**தற்போது நடித்துக் கொண்டிருக்கும் படங்கள்?**

‘புஷ்பா 2’, ‘ரெயின்போ’, ‘கேர்ள்ஃபிரண்ட்’. இப்போது ‘தி கேர்ள் ஃபிரண்ட்’ படத்தின் படப்பிடிப்புக்குதான் சென்று கொண்டிருக்கிறேன்.

**உங்களது பள்ளி நாட்களில் எந்த வகுப்பு உங்களுக்கு பிடித்தமானதாக இருந்தது?**

ஐந்தாம் வகுப்பு. ஏனென்றால், அந்த வகுப்பில் யாரும் விடுதியில் சேர்ந்து படிக்க மாட்டார்கள். எல்லாரும் வீட்டில் இருந்துதான் வருவார்கள். ஆனால், நாங்கள் ஐந்து பேர் விடுதியில் தங்கி யிருந்தோம். ஆசிரியர் எங்கள் அறைக்கு வந்து நீண்ட நேரம் பேசுவார். மகிழ்ச்சியான காலம் அது.

**நீங்கள் யாரையாவது கன்னத்தில் அறைந்துள்ளீர்களா?**

‘டியர் காம்ரேட்’ படப்பிடிப்பில் தான் முதல் முறையாக அடித்தேன். ஒருவரை நான் அடிப்பது போன்ற காட்சி. முதலில் நான் அடிக்கவில்லை. இயக்குநரும் நடிகரும் ‘தாராளமாக அடி கொடுங்கள்’ என்றனர். ஆனால், எனக்கு ஒரு மாதிரியாக இருந்தது. ஏனென்றால், நான் யார் மீதும் அடிக்க கை ஓங்கியதில்லை. ஆனால், அந்த பாத்திரத்தில் முழு ஈடுபாடு காட்டியதால், அவரது கன்னத்தில் ஓங்கி அறைந்தேன். நான் அடித்த வேகத்தில் அவரது கன்னத்தில் எனது கைத்தடம் பதிந்து சிகப்பு நிறமாக மாறிவிட்டது.

**உங்கள் வருங்கால கணவர் எப்படிப்பட்டவ ராக இருக்க வேண்டும்?**

புகை பிடிக்கக்கூடாது. எனக்கு புகை பிடிப்பவர்களை சுத்தமாக பிடிக்காது. சிகரெட் புகைக்கு அருகில் என்னால் நிற்க முடியாது. இப்போது அவர் காலையில் புகை பிடிக்கிறார் என்றால், மாலைவரை எனக்கு அந்த உணர்வு போகாது. எனக்கு அந்தளவிற்கு அலர்ஜி. எனது தந்தையும் சிகரெட் புகைப்பார். நீங்கள் சிகரெட் குடிக்க வேண்டுமென்றால் வீட்டிற்கு வெளியே போய் குடித்து விட்டு அதன்பிறகு உள்ளே வாருங்கள் என்பேன்.

**மதுபானம் அருந்துபவர்?**

எப்போதாவது மதுபானம் அருந்துபவராக இருந்தால் பிரச்சனையில்லை

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)

**சரி, அவர் எந்த மாதிரி நபராக இருக்க வேண்டும். கூச்ச சுபாவம் கொண்டவரா**




# இயற்கை...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

**கவா தனிமை விரும்பியாகவா எல்லாரிடமும் சகஜமாக பழகுபவராகவா?**

எப்படிபட்டவராக இருந்தாலும் உண்மையுள்ள நபராக இருக்க வேண்டும். அப்படிபட்டவருக்கு மனைவியாக இருப்பதில் சந்தோஷமே. அவரோடு நேரம் செலவழிப்பதும் எனக்கு மகிழ்ச்சியே.



அவர் நிச்சியம் ரொமாண்டிக் நபராக இருக்க வேண்டும். அவர் எனக்காக பூக்களோ சாக்லேட்டோ கொடுக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அவை எனக்கு பிடிக்க வும் செய்யாது. அவர் பேசுவதை வைத்தே எனக்கு தெரிய வேண்டும்.

**உங்களுக்கு மிகப் பிடித்த விஷயம்?**

பயணம்தான். பயணம், நம் அறிவையும் மனதையும் திறக்கிறது. உணவு, கலாசாரம், வாழ்க்கைமுறை என வித்தியாசமான அனுபவம் கிடைக்கிறது. மற்றவர்களுக்கு என் அனுபவத்தில் கூறும் அறிவுரை இதுதான்; அனைவரும் பயணம் மேற்கொள்ளுங்கள். எப்போது வேண்டுமானாலும் பயணம் மேற்கொள்ளுங்கள். உங்கள் சொந்த ஊருக்கோ, நண்பர்கள் வீடுகளுக்கோ அல்லது உங்கள் கனவு பயண இலக்குக்கோ செல்லுங்கள்.

**உங்கள் அழகு ரகசியம்?**

இயற்கையை ஏற்றுக்கொள்ளுதல் தான். பெரும்பாலும் வெளியில் செல்லும் போதும் முகத்திற்கென்று பிரத்தியேகமாக எந்த மேற் பூச்சையும் மேற்கொள்வதில்லை. 'மேக்-அப்' நம் அழகை கூட்ட வேண்டுமே அன்றி, நம் இயற்கை அழகை சிதைப்பதாக இருக்கக்கூடாது. ஆனால், சூரிய கதிர்கள் நமது சருமத்தில் கருமை போன்ற பிரச்சனைகளை ஏற்படுத்தும். இதனை தவிர்க்க வெளியே செல்லும்போது 'சன்ஸ்க்ரீன்' பயன்படுத்துவேன்.

இதுபோல் இயற்கையாக கொடுக்கப்பட்டிருக்கும் சரும அழகையும் நன்றாக பார்த்துக்கொள்கிறேன். இன்னொன்று ஆரோக்கியமான வாழ்க்கை முறை. தினசரி உடற்பயிற்சி, சரியான உணவுகள், நீர்சத்தினை உடலில் தக்கவைத்துக் கொள்வது என என் உடலுக்கு தேவையான நல்ல விஷயங்களை தவறாமல் செய்வது வழக்கம்.

தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்வதும் நம் அழகை அதிகமாக்க உதவி புரியும். நமது சருமம் குறித்து நாம் முதலில் உயர்வாக நினைக்க வேண்டும். இதனால் நமக்குள் நம்மை பற்றி உயர்வான எண்ணங்கள் வளர்ந்து, பிறரையும் அது ஈர்க்கும். நாம் உடுத்தும் உடைக்கு ஏற்றவாறு முடி அலங்காரம் செய்வது நம்மை அதிகம் அழகாக காண்பிக்கும். இதனால் நமது தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

எனது பாட்டி சொன்ன ஓர் அழகுக் குறிப்பை உங்களுக்கு சொல்லுகிறேன். சம அளவு மஞ்சள் மற்றும் அரிசி மாவை எடுத்து தண்ணீர் சேர்த்து கலக்கி சருமத்தில் தடவி 10-15 நிமிடம் கழித்து கழுவினால் சருமம் பொலிவாகும்.

பொதுவாக நமக்கு ஒவ்வாமை ஏற்படுத்தும் உணவுகள் சருமத்திலும் பாதிப்புகளை ஏற்படுத்தும். இதனால் சருமத்தில் பருக்கள், வறட்சி போன்ற பிரச்சனைகள் ஏற்படும். எனவே, நான் அவற்றை தவிர்த்துவிடுவேன். மேலும் எண்ணெய் உணவுகளை சாப்பிட மாட்டேன். ஒரு நாளைக்கு பலமுறை முகத்தை கழுவுவது தவறு. வறட்சியைத் தவிர்க்க ஒரு நாளைக்கு இரண்டு முறை மட்டுமே கழுவுவேன். அதேநேரம் அழகைப் பொறுத்தவரை மற்றவர்களுக்கு நான் சொல்லும் அறிவுரை என்பது, யாருக்காகவும் உங்களை மாற்றிக்கொள்ளாதீர்கள் என்பதுதான். சிலர் பருமனாக இருந்தால்தான் அழகாக இருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் யாருக்காகவும் தங்கள் உடலின் வடிவத்தை மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. அழகுக்கு உதாரணமாக யாரையும் சொல்ல முடியாது. எல்லோரிடமும் ஒருவிதமான அழகு இருக்கத்தான் செய்கிறது.


**உங்கள் ரசிகர்களுக்கு ஒரு ஆலோசனை?**

உங்கள் வாழ்க்கையை முன்னெடுத்து செல்பவராக இருங்கள். நீங்கள் எங்கே போகவேண்டும், உங்கள் வாழ்க்கையில் என்னவாக வேண்டும் என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள்.

**இதுபோல் நிறைய பேட்டிகள் கொடுத்திருப்பீர்கள். இந்த பேட்டிகளில் உங்களை அதிகம் எரிச்சலூட்டும் கேள்விகள் எவை?**

யாரிடமாவது 'ரிலேஷன்ஷிப்'பில் இருக்கிறீர்களா என்று கேட்பார்கள். திரைத்துறையில் பெண்கள் பணியாற்றி னால், அவர்கள் எந்த ஆண் நடிகரிடமா வது 'ரிலேஷன்ஷிப்'பில் இருந்துதான் ஆக வேண்டுமா? எல்லா பெண்களும் யாருடனாவது 'ரிலேஷன்ஷிப்'பில் இருக் கிறார்களா என்ன? இன்னொன்றையும் மறக்காமல் கேட்பார்கள், யாரையாவது விரும்புகிறீர்களா, சொல்லுங்க, சொல்லுங்க? இப்படிதான் கேட்கிறார்கள். எல்லா இடத்திலும் இதுதான் நடக்கிறது. அவர்கள் பொதுவான அல்லது ஜாலியான விஷயங்கள் குறித்து கேட்பதில்லை. நல்லவேளை நீங்கள் அதுபோல் எதுவும் கேட்கவில்லை. அதற்காக உங்களுக்கு நன்றி.

## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

வெற்றியைத் தேட ஆயிரம் புத்தகங்கள் இருக்கின்றன. சந்தோஷத்தை எங்கே போய்த் தேடுவது? அது உள்ளுக்குள்ளிருந்து மலர வேண்டிய விடயம் இல்லையா? நாமாக நம் வாழ்க்கையை மகிழ்ச்சியாக அமைத்துக் கொள்ள வழி(கள்) ஏதேனும் உண்டா? இந்தக் கேள்விகளை மையமாக வைத்து எழுதப்பட்ட ஒரு பிரபலமான புத்தகம் 'The way to happiness' இங்கிலாந்தைச் சேர்ந்த 'Ron Hubbard' என்பவர் எழுதிய இந்தப் புத்தகம் இன்றுவரை பல லட்சம் பிரதிகள் வெளியாகியுள்ளது. 70 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.

"The way to happiness' 'புத்தகத்தின் சிறப்பு, இதில் விரிவாக்கப்பட்டுள்ள 21 வழிமுறைகள். "இவற்றை உணர்ந்து பின்பற்றத் தொடங்குவதுதான் உண்மையான மகிழ்ச்சிக்கான அடித்தளம்' என்று ஆசிரியர் சொல்கிறார். "மகிழ்ச்சியின் வழி'யாக அவர் முன்வைக்கும் அந்த எளிய சூத்திரங்கள், இங்கே சுருக்கமாக:

1. முதலில், உடம்பைப் பார்த்துக்கொள்ளுங்கள், சுவர் இருந்தால்தான் சித்திரம்.

2. உடனடி மகிழ்ச்சியை மட்டும் பார்க்காதீர்கள், பின்விளைவுகளை யோசித்து மனதைக் கட்டுப்படுத்தப் பழகுங்கள்.

3. உங்களுடைய உறவுகளுக்கு, நண்பர்களுக்கு, வர்த்தகக் (Business) கூட்டாளிகளுக்கு விசுவாசமாக இருங்கள்.

4. உங்கள் வயசு எதுவானாலும் பரவாயில்லை, குழந்தைகளோடு நேரம் செலவிடுங்கள்.

5. பெற்றோரை மதியுங்கள். அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யுங்கள்.

6. "அடுத்தவர்களுக்கு நான் ஒரு நல்ல முன் உதாரணமாகத் திகழ்வேன்" என்று உங்களுக்கு நீங்களே உறுதி சொல்லிக் கொள்ளுங்கள்.

7. உண்மை எத்தனை கசப்பானாலும் பரவாயில்லை, ஏற்றுக்கொள்ளுங்கள்.

8. யாரையும் கொல்லாதீர்கள், வார்த்தைகளால்கூட!

9. சட்டவிரோதமான எதையும் செய்யாதீர்கள், அதனால் எத்தனை லாபம் வந்தாலும் சரி!

10. பாரபட்சமின்றி சமூகத்தில் ஒரு சமநிலை வருவதற்கு உங்களால் என்ன செய்ய முடியும் என்று யோசிக்க ஆரம்பியுங்கள்.

11. ஒருவர் நல்லது செய்யும்போது, ஏதாவது சொல்லி அவரது முயற்சியைக் கெடுத்துவிடாதீர்கள்.

12. உங்கள் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது உங்களுடைய பொறுப்பு.

13. திருடாதீர்கள்.

14. எல்லோருடைய நம்பிக்கைக்கும் உரியவராக இருங்கள்.

15. சொன்ன வாக்கை மீறாதீர்கள்.

16. "சும்மா இருப்பதே சுகம்" என்று யாராவது சொன்னால் நம்பாதீர்கள்.

17. கல்வி என்பது முடிவற்றது, எந்நேரமும் மாணவராகவே வாழவேண்டும்!

18.அடுத்தவர்களுடைய மத உணர்வுகளை மதியுங்கள், கேலி செய்யாதீர்கள்.

19. மற்றவர்கள் உங்களுக்கு எதையெல்லாம் செய்யக்கூடாது என்று நினைக்கிறீர்களோ, அதை நீங்களும் அவர்களுக்குச் செய்யாதீர்கள்.

20. அதேபோல், அவர்கள் உங்களை எப்படி நடத்தவேண்டும் என்று நினைக்கிறீர்களோ, அப்படியே நீங்கள் அவர்களை நடத்துங்கள்.

21. இந்த உலகம் வளங்களால் நிறைந்தது,அள்ளிக்கொடுங்கள். ஏனென்றால் நாம் போகும்போது சிறிதும் அள்ளிச்செல்ல முடியாது.

- சிவகுமார்

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361